உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

ரமழான்
விஷேட
வெளியீடு

# ஆன்மாவுடன் ஓர் அமர்வு

வெளியீடு
BookMark
The Online Book Store

# ஆன்மாவுடன் ஓர் அமர்வு

உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

வெளியீடு

BookMark
The Online Book Store

நூலின் பெயர் : ஆன்மாவுடன் ஓர் அமர்வு
நூலாசிரியர் : உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்
பக்கங்கள் : 83+iii

வெளியீடு

BookMark
The Online Book Store
www.bookmark.shophere.lk

அனுசரணை

Business Genius

வடிவமைப்பு

Diamond DESIGNS

இது ஓர் இலவச மின் நூல் (e-Book) ஆக வெளியிடப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 077 172 8021 (Whatsapp)

## பதிப்புரை

உஸ்தாத் ஏ.ஸீ அகார் முஹம்மத் அவர்கள் தனது முகநூல் பக்கத்தில் தொடராக எழுதி வந்த "ஆன்மாவுடன் ஓர் அமர்வு" என்ற தொடரின் முதல் 40 பகுதிகளும் மின்நூல் (e-Book) வடிவில் காலத்தின் தேவை கருதி -ரமழான் மாதத்தை முன்னிட்டு- வெளியிடப்படுகிறது.

ரமழான் மாதம் ஆன்மீக உணர்வுகளை மேம்படுத்துகின்ற ஒரு மாதம். அல்லாஹ் எம்மை கண்காணித்துக் கொண்டிருக் கிறான் என்ற உணர்வை அதிகமதிகம் ஏற்படுத்தும் நல்ல பல அமல்களைக் கொண்ட மாதம். எமது உள்ளங்களோடு பேசு கின்ற, எமது இறை உணர்வைத் தூண்டுகின்ற பல ஆக்கங்கள் இத்தொடரில் இருக்கின்றன.

இந்த மின்நூல் (e-Book) நிச்சயம் இதனை வாசிப் போருக்கு பயனளிக்கும் என நம்புகின்றோம். இதனை வெளியிடுவதற்கு அனுமதி தந்த உஸ்தாத் அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இதனை தமிழில் அழகுற வடிவமைத்துத் தந்த Diamond Designs குழுவினருக்கும் இதனை இலவசமாக வெளியிட அனுசரணை வழங்கிய பிஸினஸ் ஜீனியஸ் (Business Genius) நிறுவனத்தாருக்கும் எமது வெளியீட்டு நிறுவனமான BookMark குழுவினர் சார்பாக மனமார்ந்த நன்றி-களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் வாசகர்களாகிய நீங்கள் இந்த மின்நூலைப் (e-Book) படித்துப் பயன்பெறுவதோடு அனைவரும் பயன்பெற உங்கள் நண்பர்கள், உறவினர்கள், ஏனையோருடனும் பகிர்ந்து உதவுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

அஷ்ஷெய்க் **M.Z.** றிஸ்வானுர் ரஹீம் (நளீமி)
08.03.2024

## அமர்வு 01

قال ابن القيم رحمه الله:
للعبد بين يدي الله موقفان موقف بين يديه في الصلاة
وموقف بين يديه يوم لقائه، فمن قام بحق الموقف الأول، هون عليه الموقف الآخر

ஓர் அடியானுக்கு அல்லாஹ்வுக்கு முன்னால் இரண்டு நிலைகள் உள்ளன.
ஒன்று, தொழுகையில் அவனுக்கு முன்னால் நிற்பது!
அடுத்தது, நாளை மறுமையில் அவன் சன்னிதானத்தில் அவனுக்கு முன்னால் நிற்பது.

முதலாவது நிலையை சிறப்பாக அமைத்துக் கொண்டவருக்கு அவரது இரண்டாவது நிலை சீராக- இலேசாக அமைந்துவிடும்.”

(இப்னுல் கையிம் (றஹ்))

பின்வரும் நபிமொழி இமாம் அவர்களின் மேற்கண்ட கருத்துக்கு தெளிவான சான்றாக அமைந்துள்ளது:

"ஓர் அடியான் நாளை மறுமையில் அவன் செய்த அமல்களில் தொழுகை பற்றியே முதலில் விசாரிக்கப்படுவான். அது சீராக அமைந்திருந்தால் அவன் வெற்றி பெற்றுவிடுவான். அது சீர்கெட்டிருந்தால் அவன் தோல்வியடைந்து விடுவான். நஷ்டம் அடைந்து விடுவான்..."

(திர்மிதி, நஸாஈ, அபூ தாவூத்)

மறுமையில் தொழுகை விஷயத்தில் ஒருவர் ஜெயித்துவிட்டால் அவரது ஏனைய எல்லா விஷயங்களும் சீராக, சிறப்பாக அமைந்து விடும் என்பது தெளிவு. தொழுகைதான் மறுமை விசாரணையின் break-through- திருப்புமுனை*!*

# அமர்வு 02

ஈமானிய்ய உறவுகளே,

அண்மையில் ஒரு வீடியோ பதிவைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதில் த∴வா பணியாளர் சகோதரர் ஷெய்க் உமர் ஸுலைமான் வித்தியாசமான பின்னணிகளையும் வயது மட்டங்களையும் கொண்ட சில சகோதர, சகோதரிகளிடம் மஹ்ஷர், மறுமை தொடர்பிலான சில கேள்விகளைக் கேட்கின்றார்.

கேள்விகள் மிக எளிமையானவை! ஆனால் மிகவும் உணர்வு பூர்வமானவை! உள்ளத்தில் அதிர்வை ஏற்படுத்தக் கூடியவை. பலரும் சிந்தித்துப் பார்க்காத கேள்விகள் அவை. ஆயினும் சோர்ந்து போயிருக்கும் நமது ஆன்மாக்களை தட்டியெழுப்பி உயிரூட்டி ஊக்குவிக்கும் கேள்விகளாக அவை அமைந்திருந்ததை நான் கண்டேன்.

அவர் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் அவர்களில் ஒவ்வொருவரும் வித்தியாசமான விடைகளையும் விளக்கங்களையும் சொன்னார்கள். அவர்கள் பகிர்ந்து கொண்ட விஷயங்கள் மிகவும் உணர்ச்சிபூர்வமானவையாக அமைந்தன.

அந்தக் கேள்விகளில் மூன்றை இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குறித்த கேள்விகள் தொடர்பிலான உங்களது உணர்வுகளையும் உங்களது உள்ளங்களில் தோன்றும் எண்ணங்களையும் இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் மனதைத் தொட்ட கேள்விக்கு மாத்திரம் நீங்கள் பதில் கூறினாலும் போதுமானது.

### கேள்வி 01:

இதோ நீர் கப்றிலிருந்து எழுப்பப்பட்டு மஹ்ஷர் மைதானத்தில் எழுந்து நிற்கின்றீர். அந்தக் கணப்பொழுதில் உமது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள், உணர்வுகள் எதுவாக இருக்கும்? எப்படி இருக்கும்?

### கேள்வி 02:

மஹ்ஷரில், விசாரணைக்காக கூடியிருக்கும் அந்தப் பயங்கரமான வேளையில் றப்புல் ஆலமீன் அல்லாஹுத் தஆலாவோடு ஓரிரு வார்த்தைகள் பேசக்கூடிய சந்தர்ப்பம் உமக்குக் கிடைத்தால் நீர் அவனிடம் என்ன சொல்வீர்? எதைக் கேட்பீர்?

### கேள்வி 03:

நீர் அல்லாஹ்வின் அருளால் ஸிறாத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடந்து விட்டீர், சுவனம் நுழைந்து விட்டீர் என வைத்துக் கொள்வோம். (வல்ல றஹ்மான் நம் அனைவருக்கும் சுவன பாக்கியத்தை தந்தருள் வானாக) அங்கே சுவர்க்கத்தில் முதலில் யாரைப் போய் பார்க்க விரும்புவீர்? சந்தித்து பேச விரும்புவீர்?

# அமர்வு 03

"பெரும்பாலான மனிதர்கள் அல்லாஹ் தமக்குச் செய்ய வேண்டியவை பற்றி அலட்டிக் கொள்ளும் அளவுக்கு தாம் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டியவை தொடர்பில் கரிசனை கொள்வதில்லை!"

(இமாம் இப்னுல் கையிம்)

நாம் எப்போதும் அல்லாஹ்வுக்கு நிறை வேற்ற வேண்டிய கடமைகளிலேயே கரிசனை கொள்ளல் வேண்டும். நிச்சயமாக நாம் அவனுக் குரிய கடமைகளை நிறைவேற்றுகின்றபோது அவன் நமக்குத் தேவையானவற்றை தருவான். நிறைவாகவும், பல மடங்காகவும் தருவான். அவை பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான்: என்னைக் குறித்து என் அடியான் எப்படி நினைக்கிறானோ அப்படியே நான் அவனிடம் நடந்து கொள்வேன். அவன் என்னை நினைவுகூரும்போது அவனுடன் நான் இருப்பேன்.

அவன் தனது உள்ளத்தில் என்னை நினைவுகூர்ந்தால், நானும் எனது உள்ளத்தில் அவனை நினைவுகூருவேன். என்னை ஓர் அவையோர் மத்தியில் அவன் நினைவுகூர்ந்தால், அவர்களை விடச் சிறந்த ஓர் அவையோரிடம் அவனை நான் நினைவு கூருவேன். அவன் என்னை ஒரு சாண் அளவு நெருங்கினால், நான் ஒரு முழம் அளவு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவு என்னை நெருங்கினால், (வலமாகவும் இடமாகவும் விரிந்த) இரு கைகளின் நீட்டளவு அவனை நான் நெருங்குவேன். என்னை நோக்கி அவன் நடந்துவந்தால், அவனை நோக்கி நான் ஓடிச்செல்வேன்."

( புகாரி)

## அமர்வு 04

கவலை கொள்ளாதே மனமே!
இறைவன் என்றும் துணையிருப்பான் உன்னுடனே!

(இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் அறபு மொழியில் எதுகை, மோனையுடனும் ஓசை நயத்துடனும் உணர்ச்சிபூர்வமாகவும் பாடிய ஒரு கவிதையின் சாதாரண தமிழ் வடிவம் இது)

تَوَكَّلتُ في رِزقي عَلى اللَهِ خالِقي
وَأَيقَنتُ أَنَّ اللَهَ لا شَكَّ رازِقي
وَما يَكُ مِن رِزقي فَلَيسَ يَفوتَني
وَلَو كانَ في قاعِ البِحارِ العَوامِقِ
سَيَأتي بِهِ اللَهُ العَظيمُ بِفَضلِهِ
وَلَو لَم يَكُن مِنّي اللِسانُ بِناطِقِ
فَفي أَيِّ شَيءٍ تَذهَبُ النَفسُ حَسرَةً
وَقَد قَسَمَ الرَحمَنُ رِزقَ الخَلائِقِ

எனது வாழ்வாதார விஷயத்தில்
என்னைப் படைத்த இறைவனை
நான் முழுமையாக நம்பியிருக்கின்றேன்.

அவன் எனக்குரிய வாழ்வாதாரத்தை தருவான்
என்பதில் -சந்தேகத்திற்கு இடமின்றி-
எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது.

எனக்கென்று நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாதாரம்
ஆழ்கடலின் அடியில் இருந்தாலும்
அது என்னை வந்து சேராமல் இருக்காது.

நான் வாய் திறந்து வேண்டாத போதிலும்
அவன் தன்னருளைக் கொண்டு
அதை என் கரம் கொண்டு வந்து சேர்ப்பான்.

றஹ்மானான இறைவன்
படைப்புகளுக்குரிய வாழ்வாதாரத்தை
என்றோ தீர்மானித்து பகிர்ந்தளித்திருக்கும் போது
உள்ளம் ஏன் கவலை கொள்ள வேண்டும்!?

எனக்கென்று நிர்ணயிக்கப்பட்ட வாழ்வாதாரம் ஆழ் கடலின் அடியில் இருந்தாலும் அது என்னை வந்து சேராமல் இருக்காது.

## அமர்வு 05

எந்த நிலையும் மாறும்! இந்த நிலையும் மாறும்!

(இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் அறபு மொழியில் எதுகை, மோனை யுடனும் ஓசை நயத்துடனும் உணர்ச்சி பூர்வமாகவும் பாடிய மற்றுமொரு கவிதையின் சாதாரண தமிழ் வடிவம் இது)

دَعِ الأَيّامَ تَفعَلُ ما تَشاءُ
وَطِب نَفساً إِذا حَكَمَ القَضاءُ
وَلا تَجزَع لِحادِثَةِ اللَيالي
فَما لِحَوادِثِ الدُنيا بَقاءُ
وَكُن رَجُلاً عَلى الأَهوالِ جَلداً
وَشيمَتُكَ السَماحَةُ وَالوَفاءُ
وَإِن كَثُرَت عُيوبُكَ في البَرايا
وَسَرَّكَ أَن يَكونَ لَها غِطاءُ
تَسَتَّر بِالسَخاءِ فَكُلُّ عَيبٍ
يُغَطّيهِ كَما قيلَ السَخاءُ
وَلا تُرِ لِلأَعادي قَطُّ ذُلّاً

فَإِنَّ شَماتَةَ الأَعدا بَلاءُ
وَلا تَرجُ السَماحَةَ مِن بَخيلٍ
فَما في النارِ لِلظَمآنِ ماءُ
وَرِزقُكَ لَيسَ يُنقِصُهُ التَأَنّي
وَلَيسَ يَزيدُ في الرِزقِ العَناءُ
وَلا حُزنٌ يَدومُ وَلا سُرورٌ
وَلا بُؤسٌ عَلَيكَ وَلا رَخاءُ
إِذا ما كُنتَ ذا قَلبٍ قَنوعٍ
فَأَنتَ وَمالِكُ الدُنيا سَواءُ
وَمَن نَزَلَت بِساحَتِهِ المَنايا
فَلا أَرضٌ تَقيهِ وَلا سَماءُ
وَأَرضُ اللَهِ واسِعَةٌ وَلَكِن
إِذا نَزَلَ القَضا ضاقَ الفَضاءُ
دَعِ الأَيّامَ تَغدِرُ كُلَّ حينٍ
فَما يُغني عَنِ المَوتِ الدَواءُ

காலம் அது விரும்பியதைச் செய்து விட்டுப் போகட்டும். கலங்காதே!

"கழா"வானது அதன் தீர்ப்பை அளித்து விட்டால் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்!

இடர்களின் போது வருத்தம் கொள்ளாதே!

ஏனெனில் உலக நிகழ்வுகள் எதுவும் நிலைத்து நின்று விடுபவையல்ல.

அனர்த்தங்களுக்கு முன்னால் நிலைகுலையாமல் உறுதியாக நில்!

கருணையும் நேர்மையும் உனது குணங்களாக இருக்கட்டும்!

மக்கள் மத்தியில் உன் குற்றங்குறைகள் பரவலாகிவிட்ட நிலையில் அவற்றை நீ மூடி மறைக்க வேண்டும் என்று விரும்பினால் கொடையை- பெருந்தன்மையை மறைப்பாகக் கொள். கொடை- பெருந்தன்மை எல்லாக் குறைகளையும் மறைத்து விடும் என்பார்கள்.

எதிரிகளுக்கு எந்நிலையிலும் உன் இழி நிலையைக் காண்பிக்காதே. உனது துன்பத்தைக் கண்டு உன் எதிரிகள் அடையும் இன்பம் என்பது மிகப்பெரும் துன்பமாகும்.

கஞ்சனிடம் தாராளத்தன்மையை எதிர்பார்க்காதே. தாகித்தவனுக்கு நெருப்பில் நீர் கிடைக்கப் போவதில்லையே.

நீ அவசரப்படாமல் நிதானமாக நடந்து கொள்வதனால் உனது வாழ்வாதாரம் குறையப்போவதில்லை.
நீ அதிகம் அலட்டிக் கொண்டு கஷ்டப்படுவதால் உனது வாழ்வாதாரம் கூடப் போவதுமில்லை.

கவலையோ, மகிழ்ச்சியோ, கஷ்டமோ, சுகமோ எதுவும் தொடர்ந்து இருக்கப்போவதில்லை.

நீ இருப்பதைக் கொண்டு உள்ளத்தளவில் திருப்தி கொண்டவனாக இருந்தால் நீயும், உலகையே தன் கைவசம் வைத்திருப்பவனும் சமமே!

யாருக்கு மரணத்திற்கான தவணை வந்துவிடுமோ இந்தப் பூமியாலோ, அந்த வானத்தாலோ அவனைப் பாதுகாக்க முடியாது.

அல்லாஹ்வின் பூமி விசாலமானது தான். ஆனால் ஒருவருக்குரிய "கழா" இறங்கி விட்டாலோ அவருக்கு முன்னால் இந்த வான்வெளியே சுருங்கி விடும்.

காலம் செய்யும் கோலங்களை அலட்டிக் கொள்ளாதே. மரணத்திற்கு மருந்தில்லையல்லவா!?

## அமர்வு

# 06

அல்லாஹ் ஒருவருக்கு சந்தோஷத்தை விதித்திருந்தால் அவர் அனுபவிக்கும் அந்த சந்தோஷத்தை யாராலும் திருடவோ, தட்டிப் பறிக்கவோ முடியாது.

அவன் ஒருவருக்கு கவலையை- மனமுறிவை விதித்திருந்தால் யாராலும் அதனைக் களையவோ, சரி செய்யவோ முடியாது.

எனவே இன்பத்திலும் துன்பத்திலும் எல்லா நிலைகளிலும் நாடப்பட வேண்டியவனும், தேடப்பட வேண்டியவனும் அவனே என்ற உண்மையை உணர்வோம்!

அமர்வு

# 07

அய்யூப் அஸ்ஸக்தியானி (றஹ்) ஒரு பிரபல தாபிஈ.

பெயர், புகழை சற்றும் விரும்பாதவராகவும் உலகப் பற்றில்லாத வராகவும் வாழ்ந்தவர் அவர்.

அவரது நண்பராக இருந்த யஸீத் இப்னுல் வலீத் காலப் போக்கில் நாட்டின் கலீபாவானார். இந்த செய்தியைக் கேள்விப்பட்ட அய்யூப் அஸ்ஸக்தியானி (றஹ்) பின்வருமாறு பிரார்த்தித்தார்:

اللهم أنسه ذكري

"யா அல்லாஹ்!
அவருக்கு என்னை - என்னைப்
பற்றிய நினைவை மறக்கச் செய்துவிடுவாயாக!"

(ஆதாரம் : سير أعلام النبلاء)

# அமர்வு 08

“ لا تعمل لتُذكر، اكتم الحسنة كما تكتم السيئة ”
(بشر بن الحارث)

பெயர், புகழை எதிர்பார்த்து கருமமாற்றாதே!
நீ செய்யும் தீமையை நீ மறைப்பது போல, செய்யும் நன்மையையும் - நற்செயலையும் மறைத்துவிடு.

(பிஷ்ர் இப்னுல் ஹாரிஸ் (றஹ்) - இவர் பிஷ்ருல் ஹாபி எனும் பெயரில் பிரபலமான, ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மகான்)

ஒரு மு.்.மின் தனது சில அமல்களையாவது மறைமுகமாக, எவரும் அறியாத வண்ணம், கண்டு கொள்ளாத விதத்தில் செய்துவர வேண்டும். குறைந்தது அப்படிப்பட்ட ஒரே ஒரு அமலாவது இருந்தாக வேண்டும். அவர் செய்து வரும் அந்த நற்காரித்தை அவரது வாழ்க்கைத் துணையோ அல்லது நெருக்கமான மற்றொருவரோ கூட தெரிந்திருக்கக் கூடாது. அல்லாஹ் மாத்திரம் அறிந்ததாக அது இருத்தல் வேண்டும்.

இந்த ரகசிய அமல் الخبيئة الصالحة என்று அழைக்கப்படுகிறது.

இந்த மறைமுகமான, இரகசிய அமல் ஒரு சுன்னத்தான தொழுகையாக அல்லது திலாவத்துல் குர்ஆனாக அல்லது ஒரு திக்ராக அல்லது ஒரு தர்மமாக, உதவியாக, உபகாரமாக, மற்றொன்றாக, இன்னொன்றாக இருக்கலாம்.

இத்தகைய ஓர் இரகசிய அமல் மிகவும் பலம் வாய்ந்தது. ஏனென்றால் அது தூய்மையானதாக இருக்கும். பெயர், புகழ், பிரபல்யம் எதனையும் எதிர்பார்க்காமல் அல்லாஹ்வின் திருப்பொருத்தமொன்றையே நாடியதாக இருக்கும். ஒரு முஹ்லிஸான மு..மினால் மட்டுமே இப்படி ஒரு அமலை செய்துவர முடியும்.

மறைவாகச் செய்து வரும் இரகசிய அமல் வாழ்க்கையில் கஷ்ட, நஷ்டங்களின் போது துணை நிற்கும். நாளை மறுமையில் கை கொடுக்கும்.

صدقة السر تطفئ غضب الرب-صحيح

"இரகசிய தர்மம் ரப்புடைய கோபத்தை அணைக்கும்"
என்பது நபி வாக்கு.

# அமர்வு 09

அபூ நவாஸ் (அபூ நுவாஸ்) அப்பாஸியர் காலத்தில் வாழ்ந்த ஒரு பிரபல கவிஞர். இவரது இயற்பெயர் ஹஸன் பின் ஹானி என்பதாகும்.

இவரது வாழ்வு மிகவும் பொடுபோக்கானதாக அமைந்திருந்தது. இவரது கவிதைகள் பெரும்பாலும் மது, மாது பற்றிய வர்ணனைகளா-கவே அமைந்திருந்தன. இவர் தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் தனது தவறுகளுக்காக மனம் வருந்தியதாக வரலாறு சொல்கின்றது.

இவர் வபாத்தான போது இவரது ஜனாஸாவைத் தொழுவிக்குமாறு இமாம் ஷாபிஈ வேண்டப்பட்ட போதிலும் அவர் ஆரம்பத்தில் மறுத்து விட்டார். பிறகு அபூ நவாஸின் ஜனாஸா குளிப்பாட்டப்பட்ட வேளை யில் சட்டைப் பையில் இருந்து ஒரு கடதாசி கண்டெடுக்கப்பட்ட-தாகவும் அதில் அல்லாஹ்வை விளித்துப் பாடும் சில கவிதை வரி-கள் எழுதப்பட்டிருந்ததாகவும் அந்தக் கவிதையை வாசித்த இமாம் ஷாபிஈ கண்ணீர் வடித்து அழுததாகவும் பிறகு தானே முன்னின்று அபூ நவாஸின் ஜனாஸா தொழுகையை நடாத்தியதாகவும் சில வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

அந்த வரலாற்றுப் புகழ் மிக்க கவிதையின் சாதாரண தமிழ் வடிவமே இங்கு உங்களுக்காகப் பகிரப்படுகின்றது.

அறபு மொழியில் எதுகை, மோனையுடனும் ஓசை நயத்துடனும் உணர்ச்சிபூர்வமாகவும் பாடப்பட்ட ஒரு கவிதை இது.

நான் கடந்த நான்கு தசாப்த காலத்திற்கு மேலாக அவ்வப்போது உணர்வுபூர்வமாக நினைவுகூரும் அற்புதமான வரிகள் இவை.

يا رَبِّ إن عَظُمَت ذُنوبي كَثرَةً
فَلَقَد عَلِمتُ بِأَنَّ عَفوَكَ أَعظَمُ
إن كانَ لا يَرجوكَ إِلّا مُحسِنٌ
فَبِمَن يَلوذُ وَيَستَجيرُ المُجرِمُ
أَدعوكَ رَبِّ كَما أَمَرتَ تَضَرُّعاً
فَإِذا رَدَدتَ يَدي فَمَن ذا يَرحَمُ
ما لي إِلَيكَ وَسيلَةٌ إِلا الرَجا
وَجَميلُ عَفوِكَ ثُمَّ أَنّي مُسلِمُ

இறைவா! எனது பாவங்கள் எண்ணிக்கையில் பெரியவைதான்.
ஆனால் உனது மன்னிப்பு மிகப் பெரியது என்பதை நான் நன்கறிவேன்!

நல்லவரும், நன்மை செய்தவரும் மட்டுமே உன்னை,
உனது அருளை ஆதரவு வைக்க முடியும் என்றிருந்தால்
(என்னைப் போன்ற) பாவிகள் யாரிடம் செல்வது?
யாருடைய துணையை நாடுவது!?

இறைவா நீ ஏவிய படி பணிந்து,
குனிந்து உன்னிடம் இறைஞ்சுகின்றேன்!
நீ எனது கரங்களைத் தட்டிவிட்டால்
யார்தான் என் மீது கருணை கொள்வார்!

உன்னை, உனது கருணையை நான் அடைய
உன்மீது நான் கொண்டுள்ள ஆதரவையும்
உனது அழகான மன்னிப்பையும்
தவிர வேறு ஏதும் வழி என்னிடமில்லை!
நான் ஒரு முஸ்லிமாக இருக்கின்றேன்
என்பதையும் சொல்லிவைக்க விரும்புகின்றேன்!

## அமர்வு
# 10

படைப்புகளின் பார்வைபடுகின்ற தனது முகத்தை அலட்டிக் கொள்ளும் மனிதன் படைப்பாளனின் பார்வைக்குரிய தன் உள்ளத்தை அலட்டிக் கொள்ளாமல் இருப்பது ஆச்சரியமானது!
(இமாம் அல்-கஸ்ஸாலி)

அல்லாஹ்வின் பார்வை உள்ளத்தில்தான் இருக்கின்றது! உடலில் அல்ல. இந்த உண்மையை பின்வரும் நபிமொழி விளக்குகின்றது.

"நிச்சயமாக அல்லாஹ் உங்களது உருவங்களையோ, உடல்களையோ பார்ப்பதில்லை. உங்களது உள்ளங்களையும் செயல்களையுமே அவன் பார்க்கின்றான்." (முஸ்லிம்)

கைகளை சுத்தம் செய்யும் மனிதர்கள் கல்புகளை சுத்தம் செய்யத் தவறிவிட்டார்கள். உடலை சுத்தமாக வைத்துக்கொள்வதில் ஆர்வம் காட்டும் மனிதர்கள் உள்ளத்தை சுத்தப்படுத்த தவறிவிட்டார்கள். புற அழகைப் பார்த்தவர்கள், அகத்தின் அழகைப் பார்க்க மறந்து விட்டார்கள்.புற அழுக்குகளை நீக்குவதில் காட்டப்படும் ஆர்வம், அக அழுக்குகளை நீக்குவதில் காட்டப்படுவதில்லை.

உடலை ஒரு வீட்டுக்கு ஒப்பிட்டால் அந்த வீட்டில் வாழும் மனிதன்-தான் ஆன்மா. வீடு எவ்வளவு விசாலமானதாகவும் வசதியானதாகவும் சொகுசானதாகவும் அமைந்திருந்தாலும் அந்த வீட்டில் வாழும் மனிதன் நோயாளியாக இருந்தால் அல்லது ஆரோக்கியம் குன்றியவனாகயிருந்-தால் அந்த வீட்டுக்கு என்ன பெறுமானம்?!

அதேபோல ஒருவரின் உடல் ஆரோக்கியமாக இருந்தாலும், பலமாக இருந்தாலும் அவரின் ஆன்மா நோய்வாய்ப்பட்டதாக இருந்-தால், பலயீனமானதாக இருந்தால் அவரது நிலை அவலமானதாகவே இருக்கும்.

எமது உடல் ஆரோக்கியம் முக்கியமானது என்பதில் இரு கருத் துக்களுக்கு இடமில்லை. ஆனால் அதை விட உள ஆரோக்கியம், ஆன்மாவின் ஆரோக்கியம் மிக, மிக முக்கியமானது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

# அமர்வு

# 11

إِنَّ لِلَّهِ عِباداً فُطَنا
تَرَكوا الدُنيا وَخافوا الفِتَنا
نَظَروا فيها فَلَمّا عَلِموا
أَنَّها لَيسَت لِحَيٍّ وَطَنا
جَعَلوها لُجَّةً وَاتَّخَذوا
صالِحَ الأَعمالِ فيها سُفُنا

- இறையடியார்களில் ஒரு சாரார் இருக்கின்றார்கள். அவர்கள் புத்திசாலிகள்!
- உலகை அவர்கள் துறந்தார்கள்! அதன் மாயைகளை - குழப்பங்களைப் பயந்து (அவற்றில் போய் சிக்கிவிடாமல்) விலகி நடந்தார்கள்!
- இந்த உலகைப் பார்த்த அவர்கள் இது (நிலையாக) வாழ்பவருக்குரிய இடமல்ல என்பதைப் புரிந்தார்கள்!
- உலகை அவர்கள் ஒரு கடலாகக் கொண்டார்கள்! நற்கருமங்களை அதனைக் கடக்கும் கப்பல்களாக ஆக்கிக் கொண்டார்கள்!

● இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள்

வெளியீடு BookMark The Online Book Store

# அமர்வு 12

- நீங்கள் ஒரு வார்த்தையைப் பேசும் போதும் சரி, ஒரு காரியத்தைச் செய்யும் போதும் சரி மிக எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்! வார்த்தைகளில், வசனங்களில் மிக விழிப்பாக நடந்து கொள்ளுங்கள்!

- உங்களது ஆட்ட, அசைவுகளைக் கூட கவனமாக அமைத்துக் கொள்ளுங்கள்!

- ஏனெனில் பலபோது நீங்கள் பொருட்படுத்தாமல் பேசும் சில வார்த்தை கள், செய்யும் சில காரியங்கள் நீங்கள் சிரமப்பட்டுத் தேடிய உங்களது நன்மைகளை வீணாக்கி, பாழாக்கி விடக்கூடும்!

- நமது நிலை ஓட்டைப் பையில் நன்மைகளை சேகரித்தவரின் கதையாகி விடக்கூடாது!

பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை மனதில் கொண்டு நாங்களும் நீங்களும் எச்சரிக்கையாக நடந்து கொள்வோம்!

...أَنْ تَحْبَطَ أَعْمَالُكُمْ وَأَنْتُمْ لَا تَشْعُرُوْنَ

"நீங்கள் உணராமலேயே உங்களது நல்அமல்கள் அழிந்து போகும்...."
(49:2)

# அமர்வு 13

## மிகக் கெட்ட நண்பன் யார் தெரியுமா?

ஒருவன் தனது நண்பனுக்கு இழைக்கின்ற மிகப் பெரிய அநியாயம் என்ன தெரியுமா?

அவன் தனது சகா செய்கின்ற ஒரு பிழையை, பாவத்தைக் காண்கின்றான்.

அதனால் அவனது மறுமை வாழ்வு கூட பாதிக்கப்படலாம் என்பதையும் அவன் அறிவான்.

ஆனால் அந்தப் பிழையை - பாவத்தை தனது நண்பனுக்கு சுட்டிக் காட்டினால் தமது நட்பு பாதிக்கப்படலாம் என்று பயப்படுகின்றான்.

அதனால் மௌனம் காத்து தாஜா செய்கின்றான்.

இத்தகையவனே மிகக் கெட்ட நண்பன்.

“

யா அல்லாஹ்!
விசுவாசமாக நடக்கின்ற
தூய்மையான நண்பர்களை
எனக்குத் தந்தருள்வாயாக!

எனது குற்றங்குறைகளை
எனக்கு உணர்த்துகின்ற,
உன்னை நான் மறக்கும் போதெல்லாம்
உன்னை எனக்கு நினைவூட்டுகின்ற,
உன் பக்கமும் உனது அருளின் பக்கமும்
என்னை எப்போதும் வழிப்படுத்துகின்ற
நண்பர்களை எனக்குத் தந்தருள்வாயாக!

”

# அமர்வு 14

உள்ளத்தின் மென்மையைப் போக்கி அதனை வன்மையானதாக - வறண்டதாக மாற்றக்கூடிய காரணிகள் நான்கு.

அவையாவன:
- மிதமிஞ்சிய உணவு
- மிதமிஞ்சிய தூக்கம்
- மிதமிஞ்சிய பேச்சு
- மிதமிஞ்சிய மனித சகவாசம்

இமாம் இப்னுல் கையிம் (றஹ்)

அமர்வு

# 15

நம்மை குற்றம் பிடிக்க விரும்புபவன் எப்படியும் அதனை செய்து விடுவான்.

எனவே, மனிதர்களைத் திருப்திப்படுத்த முயல்வதில் பயன் இல்லை.

இறைவனைத் திருப்திப்படுத்துவதில் நம் கவனத்தைக் குவிப்பதே அறிவுடைமையாகும்.

**இறைவனின் அளவுகோல்:**
"நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும்."

**மனிதர்களின் அளவுகோல்:**
"நீ செய்யும் ஒரு குற்றம் நீ செய்த எல்லா நன்மைகளையும் அழித்து விடும்."

இந்த உண்மையைப் புரிந்து இறைவனது திருப்தியொன்றை மாத்திரம் நாடி செயற்படுவோம்!

• • •

# அமர்வு 16

قال مالك بن دينار رحمه الله:
بقدرِ ما تحزن للدّنيا يخرج همّ الآخرة من قلبك
وبقدر ما تحزن للآخرة يخرج همّ الدنيا من قلبك

“

நீ உலக வாழ்வு பற்றி கவலை கொள்ளும் அளவுக்கு மறுமை பற்றிய உனது கவலை உன் உள்ளத்தை விட்டும் அகன்று விடும்.

நீ மறுமை பற்றி கவலை கொள்ளும் அளவுக்கு உலக வாழ்வு பற்றிய உனது கவலை உன் உள்ளத்திலிருந்து சென்றுவிடும்.

-மாலிக் இப்னு தீனார் (றஹ்)-

நபி (ஸல்) அவர்கள் கேட்ட ஒரு துஆ மிகவும் பிரபலமானது:

اللَّهُمَّ لَا تَجْعَلْ الدنيا أكبرَ هَمِّنَا

யா அல்லாஹ்!

உலக வாழ்வை நமது பெரிய கவலையாக,

கரிசனையாக ஆக்கி, அமைத்துவிடாதே!

அமர்வு

# 17

மனிதர்களின் அன்பையும் அபிமானத்தையும் வரவேற்பையும் பெறுவது நமது முழுக் கவலையாகவும் கரிசனையாகவும் அமைந்து விடலாகாது.

## ஏன் தெரியுமா?

மனிதர்களின் மனோநிலை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது.

அது மாறிக்கொண்டே இருக்கும்.

இன்று நம்மை நேசிப்பவர்கள் நாளை நம்மை வெறுப்பார்கள்.

எனவே நமது ஒரே கவலையாக இருக்க வேண்டியது மனிதர்களின் றப்புடைய அன்பைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பதில்தான்.

அவன் நம்மை நேசித்துவிட்டால் எல்லோரும் நம்மோடு நேசம் கொள்வார்கள்.

அவர்கள் நேசம் கொள்ளாவிட்டாலும் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

நபி தாவூத் (அலை) அவர்கள் கேட்டு வந்த ஒரு பிரார்த்தனையை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள்:

اللَّهمَّ إِنِّي أَسْأَلُكَ حُبَّكَ، وَحُبَّ مَنْ يُحِبُّكَ، وَالعمَلَ الَّذِي يُبَلِّغُني حُبَّكَ، اللَّهُمَّ اجْعل
حُبَّكَ أَحَبَّ إِلَيَّ مِن نَفسي، وأَهْلي، ومِن الماءِ البارِدِ
(رواهُ الترمذيُّ وَقَالَ: حديثٌ حسنٌ)

"

யா அல்லாஹ்!
நான் உனது நேசத்தையும்
உன்னை நேசிப்போரின் நேசத்தையும்
உனது நேசத்தைத் தரக்கூடிய நற்செயலையும்
உன்னிடம் கேட்கின்றேன்.

யா அல்லாஹ்!
உனது நேசத்தை
எனது உயிரை விட,
குடும்பத்தை விட,
குளிர்ச்சியான நீரை விட
எனக்கு விருப்பத்திற்குரியதாக ஆக்கியருள்வாயாக!

"

அமர்வு

# 18

## பணத்தால் வாங்க முடியாதவை:

பணத்தால் கட்டிலை வாங்கலாம்;
தூக்கத்தை வாங்க முடியாது.

பணத்தால் கடிகாரத்தை வாங்கலாம்;
நேரத்தை வாங்க முடியாது.

பணத்தால் புத்தகங்கள் வாங்கலாம்;
அறிவை வாங்க முடியாது.

பணத்தால் அன்பளிப்புகளை வாங்கலாம்;
அன்பை வாங்க முடியாது.

பணத்தால் மருத்துவ மனைகளை நிர்மாணிக்கலாம்,
மருந்து வாங்கலாம்;
ஆனால் ஆரோக்கியத்தை வாங்க முடியாது.

மனிதர்களில் நிறையப் பேர் ஏழைகளாக இருக்கின்றார்கள்.
அவர்களிடம் இருப்பதெல்லாம் பணம் மட்டுமே.

(அறபு மொழியிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்டது)

# அமர்வு

# 19

நான் எப்போது மரணிப்பேன், எங்கு மரணிப்பேன் என்பது ஒருவருடைய கவலையாக இருக்க வேண்டியதில்லை. மாறாக நான் எப்போது வேண்டுமானாலும் மரணிக்கலாம், எங்கு வேண்டுமானாலும் மரணிக்கலாம். ஆனால், நான் எந்த நிலையில் மரணிப்பேன் என்பதுதான் ஒருவரின் கவலையாகவும் கரிசனையாகவும் இருத்தல் வேண்டும்.

يُبعث كلُّ عبدٍ على ما مات عليه

"ஒவ்வோர் அடியானும் எந்த நிலையில் மரணித்தானோ அந்த நிலையிலேயே (நாளை மறுமையில்) எழுப்பப்படுவான்" என்பது நபி வாக்கு.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

நான் எப்போது வேண்டுமானாலும் மரணிக்கலாம். எங்கு வேண்டுமானாலும் மரணிக்கலாம். ஆனால், நான் எந்த நிலையில் மரணிப்பேன் என்பதுதான் ஒருவரின் கவலையாகவும் கரிசனை யாகவும் இருத்தல் வேண்டும்.

யார் ஒரு நன்மையை செய்து கொண்டிருந்த நிலையில் மரணிக் கின்றாரோ அவர் அந்த நிலையிலும் யார் பாவமொன்றை செய்து கொண்டிருந்த நிலையில் மரணிக்கின்றாரோ அவர் அந்த நிலையிலும் எழுப்பப்படுவார்.

“

வல்ல றஹ்மான்
நம் அனைவருக்கும்
“ஹுஸ்னுல் காத்திமா” எனும்
நல்ல முடிவைத் தந்தருள்வானாக!

யா அல்லாஹ்!
நீ நம்மில் திருப்தி கொண்ட நிலையில்
நமது ரூஹுகளைக் கைப்பற்றுவாயாக!

”

# அமர்வு 20

அல்லாஹ்வை நெருங்குவதற்கும் அவனுடன் உணர்வுபூர்வமான-தோர் உறவை வளர்த்துக் கொள்வதற்கும் இலகுவான ஒரு வழி உண்டு. அதுதான் அவன் நம் மீது சொரிந்துள்ள அருட்கொடைகளை அவ்வப் போது நாம் எண்ணிப் பார்ப்பதாகும்.

கண்பார்வையை இழந்து எத்தனையோ பேர் குருடர்களாக இருக்க
நான் கண்பார்வையுடையவனாக இருக்கின்றேன்!

செவிப்புலனை இழந்து பலர் செவிடர்களாக இருக்கும் போது
நான் கேட்கின்றேன்; செவியேற்கின்றேன்!

பேச முடியாத ஊமைகளாக பலர் இருக்கும் போது
நான் பேசுகின்றேன்!

முடவர்களாக பலர் இருக்கும்போது
நான் நடமாடிக் கொண்டும் இயங்கிக்கொண்டும் இருக்கின்றேன்!

பலர் நோயாளிகளாக படுத்த படுக்கையில் இருக்கும் நிலையில்
நானோ சுகதேகியாக இருக்கின்றேன்...!!!

இன்னும் எத்தனை எத்தனை அருட்கொடைகளை அனுதினமும் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றேன்.

இப்படி அல்லாஹ் நம் மீது பொழிந்துள்ள அருட்கொடைகளை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்தால் நமக்கு அல்லாஹ் மீது அன்பு பிறக்கும், அது பிரவாகம் எடுத்து ஓடும் என்பதில் சந்தேகம் இல்லை.

நமது வாழ்வில் சந்திக்கும் சில துன்பங்களை நாம் அலட்டிக் கொள்கின்றோம். ஆனால் நம் வாழ்வில் நாம் அனுபவிக்கும் எண்ணில் அடங்கா இன்பங்களையும் அருட்பேறுகளையும் கண்டு கொள்ளத் தவறிவிடுகின்றோம்.

> “ ரோஜாவுக்குக் கீழ் இருக்கும்
> முள்ளைப் பார்க்கும் நாம்
> முள்ளுக்கு மேல் இருக்கும்
> அழகிய, அற்புதமான ரோஜாவைக்
> காணத் தவறிவிடுகின்றோம்! ”

"மேலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக் கிட்டால், அவற்றை நீங்கள் எண்ணிட முடியாது."

(அல்குர்ஆன் 16:18)

## அமர்வு 21

எத்துணை பெரிய உண்மை இது!

"உனது வாழ்வில் ஒரு பருவம் வரும். அந்தப் பருவத்தில் நீ மனிதர்களை விட்டும் ஒதுங்கி தனிமையில் இருப்பதில்தான் இனிமை காண்பாய்"

(அலி (றழி) அவர்கள்)

படைப்புகளுடனான உறவிலிருந்து விலகி தனிமையில் இருந்து படைப்பாளனுடன் உறவாடுவதிலும் உரையாடுவதிலுமே ஆன்மாவுக்கு விடிவும் விமோசனமும் இருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் தஸ்கியத்துன் நப்ஸுக்கான சிறந்த தொரு வழியாக தனித்திருத்தல் கருதப்படுகிறது.

"அல்லாஹ் பற்றிய ஒரு சிந்தனையோடு கூடிய ஒரு தனிமைப் படுதலைப் போல உள்ளத்துக்குப் பயனளிக்கும் மற்றொன்று இல்லை."

இப்னு அதாஇல்லாஹ் அஸ்ஸகன்தரி (ரஹ்)

"யார், அல்லாஹ் தனது உள்ளத்தை திறந்து விடவேண்டும்; தனக்கு அறிவு ஞானம் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றாரோ அவர் உணவைக் குறைத்து, அறிவீனர்களுடனான உறவைத் துண்டித்து, தனிமையைக் கைக்கொள்ளட்டும்"

என்று இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

"புலன்களை அடக்கினால் தான் உள்ளம் சீர்பெறும். கண், காது, நா முதலான புலன்களைக் கட்டுப்படுத்தும் போதே உள்ளம் சீர்பெற முடியும். புலன்களைக் கட்டுப்படுத்த சிறந்த வழி உலக சோலிகளில் இருந்து விடுபட்டு தனிமையை நாடுவதே!"

என்று விளக்குகின்றார்கள் இமாம் கஸ்ஸாலி (றஹ்).

## அமர்வு 22

நாம் பெருமை கொள்ள என்ன இருக்கிறது?

நாம் படைக்கப்பட்டிருப்பது ஒரு துளி இந்திரியத்தால்...

நமது ஆரம்பம் வெறும் களிமண்...

நம்மில் சிலர் பெருமையோடு அணியும் மிகப்பெறுமதியான பட்டாடையைத் தருவதோ அற்பமான பட்டுப்புழு.

நாம் உண்ணும் உணவு வகைகளில் மிக இன்பமானது தேன்! அதனைத் தருவது வெறும் ஒரு பூச்சி, தேனி.

நாம் இறுதியில் ஒதுங்க இருக்கும் இடமோ ஒரு புதைகுழி! அது வெறுமொரு மண்ணறை!

இனி நாம் பெருமை கொள்ள என்ன இருக்கிறது...!?

பெருமை அறியாமையின் வெளிப்பாடு! அறிவும் தெளிவும் உள்ளவன் அடக்கமாக இருப்பான்! பணிவாக நடப்பான்! விட்டுக் கொடுப்பான்! மன்னிப்பான்! மறப்பான்.

ஞாபகமிருக்கட்டும்! நமது திறமைகள் உட்பட நம்மிடம் இருப்பவையெல்லாம் இறைவனால் நமக்குத் தரப்பட்ட கொடைகள்.

ஏன் தெரியுமா? அறிவுள்ளவனுக்கு, பெருமையுடன் நடந்து கொள்வது அபத்தமானது! அர்த்தமற்றது என்பது தெரியும். தான் ஆணவத்துடன், அகங்காரத்துடன் நடந்து கொள்ள எந்த நியாயமும் இல்லை என்பது அவனுக்குத் தெரியும்.

உண்மையில் நாம் பெற்றிருப்பவையெல்லாம் அல்லாஹ் தந்தவை! நாம் உருவாக்கியவை அல்ல.

நமது பலம், உழைப்பு, முயற்சி நமக்கு பலதைத் தந்து இருக்கலாம்.

ஞாபகமிருக்கட்டும்! நமது திறமைகள் உட்பட நம்மிடம் இருப்பவை எல்லாம் இறைவனால் நமக்குத் தரப்பட்ட கொடைகள்.

எனவே பெருமைக்குரியவன் அவன் மாத்திரமே.

“ பெருமை அல்லாஹ்வின் போர்வை! யார் அதனை தனதாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றாரோ அவரை அல்லாஹ் முறியடித்து மறுமையில் நரகில் தூக்கி எறிவான் என்று எச்சரிக்கின்றது ஒரு ஹதீஸ் குதுஸி.

“ யாரிடம் கடுகளவு பெருமை உள்ளதோ அவர் சுவனம் நுழைய மாட்டார் என எச்சரிக்கின்றார்கள் நபியவர்கள்(ஸல்).

பெருமை பொல்லாதது! அதனால் ஏற்படும் ஆபத்துக்கள் பயங்கரமானவை. அது தனி மனித வாழ்வையும் சமூக வாழ்க்கையையும் பாதிக்கக் கூடியது! உறவுகளை சிதைக்கக் கூடியது! உள அமைதியை கெடுக்கக் கூடியது! உலக அமைதியையும் குலைக்கக் கூடியது.

முன்னேற்றத்தின், சொகுசு வாழ்க்கையின் உச்சத்தை தொட்டு விட்ட பிரமையில் பெருமை தலைக்கேறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த பலருக்கு கண்ணுக்குப் புலப்படாத ஓர் அற்பமான வைரஸ் பாடம் புகட்டியது நமக்கு நினைவில் இருக்கலாம்.

பாடம் படிப்போம்! படிப்பினை பெறுவோம்...!

என்றும் எப்போதும் அடக்கமாகவும் பணிவாகவும் எளிமையாகவும் வாழ முயற்சிப்போம்!

அமர்வு

# 23

உங்கள் பிரார்த்தனைக்கு இன்னும்
பதில் கிடைக்கவில்லையா?

நீ அவனிடம் மன்றாடிப் பிரார்த்தனை செய்தும்
அவனது பதில் தாமதமாகிறதா? கவலைப்படாதே!

தாமதம் நீ நம்பிக்கை இழப்பதற்குக் காரணமாக
அமைந்து விடக்கூடாது.

அவன் உனது பிரார்த்தனைக்குப் பதில் தருவதாக
வாக்களித்து இருக்கிறான் அல்லவா?

ஆகவே, அவன் நிச்சயம் பதில் தருவான்.
ஆனால் பதில் உனது தெரிவாக இருக்காது!
அவனது தெரிவாக இருக்கும்.

நீ விரும்பும் நேரத்தில் கிடைக்காது!
அவன் விரும்பும் நேரத்திலேயே கிடைக்கும்.”

-இப்னு அதாஇல்லாஹ் அஸ்ஸகன்தரீ (றஹ்)-

ஓர் அடியானின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் மூன்றில் ஒரு வகையில் பதிலளிக்கின்றான்:

**01** ஒருவரின் துஆவை ஏற்று இம்மையிலேயே அவரின் எதிர்பார்ப்பை - நாட்டத்தை நிறைவேற்றி விடுகின்றான்.

**02** ஒருவரின் பிராத்தனைக்கு இங்கு பதிலளிக்காமல் அதற்கான பிரதிபலனை நாளை மறுமையில் நற்கூலியாக வழங்குவான்.

**03** குறிப்பிட்ட பிரார்த்தனையின் மூலம் ஒருவர் எதிர்பார்க்கும் தேவையை நிறைவேற்றாமல் அதற்குப் பதிலாக அவருக்கு நேரவிருந்த மற்றொரு கஷ்டத்தை -அனர்த்தத்தை-ஆபத்தை நீக்கி விடுவான்.

தூய எண்ணத்துடன் கேட்கப்படும் துஆக்கள் வீண் போவதில்லை. எனவே பிரார்த்தித்து விட்டு பதிலுக்கு அவசரப் படலாகாது! தாமதத்தின் போது நிராசை அடையலாகாது.

அமர்வு

# 24

## பேரின்பம் பெற....

- உள்ளத்தில் ஒரு விகாரம் - சீர்குலைவு இருக்கிறது.
  **அல்லாஹ்வை நோக்கிப் பயணிப்பதன் மூலமே அது சீராக முடியும்.**

- உள்ளத்திற்கு ஒரு தனிமை உணர்வு இருக்கின்றது.
  **அல்லாஹ்வுடனான சகவாசமே அதனைப் போக்க முடியும்.**

- உள்ளத்தில் இனம் புரியாத ஒரு கவலை இருக்கிறது.
  **அல்லாஹ்வை அறிவதாலும் அவனிடம் தூய்மையான உறவு பாராட்டுவதால் கிடைக்கும் சந்தோஷத்தாலும் அதனை நீக்க முடியும்.**

- உள்ளத்தில் ஒருவகை கலக்கம் இருக்கிறது.
  **அவனை நோக்கி விரைவதாலும் அவனுடன் இணைவதாலுமே அது அமைதி பெறும்.**

- உள்ளத்தில் கைசேதங்களின் நெருப்பு எப்போதும் பற்றி எரிந்து கொண்டே இருக்கும்.
  **அவனது ஏவல், விலக்கல் அடங்கலாக அவனது கழாவை-நிர்ண யத்தை ஏற்றுப் பொருந்திக் கொண்டு அவனைச் சந்திக்கும் வரை பொறுமையைக் கடைபிடித்து வாழ்வதுதான் அதனை அணைக்கும்.**

- உள்ளத்திற்கு ஒரு தேடல் உண்டு.
  அந்தத் தேடலுக்குரியவன் அவன் மாத்திரமே. அவனை அடையாத வரை அந்தத் தேடல் முடியாது.

- உள்ளத்தில் ஒருவகை வறுமை குடிகொண்டுள்ளது.
  அவன் மீது கொள்ளும் அன்பும் சதா அவனது நினைவும் மட்டுமே அதனைப் போக்க முடியும். இல்லாத போது முழு உலகமும் அதிலுள்ள அனைத்தும் அவனுக்குக் கிடைத்த போதிலும் அந்த வறுமை அவனை விட்டும் அகலாது.

இமாம் இப்னுல் கையிம் (றஹ்)

# அமர்வு 25

நீ உன் வலியை உணர்கின்றாய் என்றிருந்தால்
நீ உயிரோடு இருக்கின்றாய் என்பது அர்த்தம்.

நீ அடுத்தவர் வலியை உணர்கின்றாய் என்றால்
நீ மனிதனாக இருக்கின்றாய் என்பது அர்த்தம்.

நீ உயிரோடு இருப்பது முக்கியம்;
நீ மனிதனாக இருப்பது அதனை விட முக்கியம்.

மனிதம் இல்லாத ஜீவன் மரித்தவனுக்குச் சமமானவன்.

மனிதனாக இருப்பவன் தனது வலியை உணர்வது போன்று
அடுத்தவர் வலியையும் உணர்வான்!
அடுத்தவர் நலனில் கரிசனை கொண்டவனாக இருப்பான்.

பிற மனிதர்களின் நலன் பேணுவது
மிக உயர்ந்ததொரு மனிதப் பண்பு.
இந்தப் பண்பை வரவேற்காத,
வலியுறுத்தாத யாரும் இல்லை! எவருமில்லை!

ஆனால் இதையும் கடந்த ஒரு பண்பு இருக்கின்றது.
அதுதான் தன் நலம் மறந்து பிறர் நலம் பேணுவது...

தனது உரிமையை விட்டுக்கொடுத்து
அடுத்தவரின் தேவையை நிறைவேற்றுவது...

தனது தேவையைப் புறந்தள்ளி
அடுத்தவரின் தேவையைப் பூர்த்தி செய்வது...

இந்தப் பண்பை இஸ்லாம் மிக உயர்ந்த பண்பாகப் பார்க்கின்றது.
இது "அல்ஈஸார்" எனும் பெயரில் அழைக்கப்படுகின்றது.

தன்னிடம் இருக்கும்போது கொடுப்பது, மேலதிகமாக இருப்பதைக் கொடுப்பது நல்லதுதான்.

ஆனால் தன்னிடம் இருப்பது தனக்கே போதாத நிலையில் அதை பிறருக்குக் கொடுப்பது, தனது தேவையை மறந்து அடுத்தவரின் தேவையை நிறைவேற்றுவது என்பது மிகப்பெரிய விஷயம் அல்லவா!?

இந்தப் பண்பைப் பெற்றவர் சாதாரண மனிதனல்ல! உயர்ந்த மனிதன். நபித்தோழர்களிடம் இந்தக் குணம் இருந்தது. அவர்களின் இந்தப் பண்பை வியந்து பாராட்டி அல்லாஹ் சில அல்குர்ஆன் வசனங் களையே இறக்கியருளினான்:

ويؤثرون على أنفسهم ولو كان بهم خصاصة

"அவர்கள் தாங்களே தேவையுள்ளவர்களாக இருந்தும்,
தங்களைவிடப் பிறருக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்!"

எனவே, அடுத்தவர் வலியை உணரும் "மனிதர்களாக" வாழ்வோம்! தன்நலம் பாராது பிறர் நலம் பேணுவோம்!

நமது தேவைகளைப் புறந்தள்ளி அடுத்தவர் தேவைகளைப் பூர்த்தி செய்வோம். குறைந்தபட்சம் எமது தேவைகளைக் குறைத்து பிறர் தேவைகளை நிறைவேற்றுவோம்!

## அமர்வு

# 26

அல்குர்ஆன் நபி யூஸுப் (அலை) அவர்களின் வரலாற்றை மிகச் சிறந்த கதை என்று வர்ணிப்பது ஏன்?

نَحْنُ نَقُصُّ عَلَيْكَ اَحْسَنَ الْقَصَصِ بِمَا اَوْحَيْنَا اِلَيْكَ هٰذَا الْقُرْاٰنَ وَاِنْ كُنْتَ مِنْ قَبْلِهٖ لَمِنَ الْغٰفِلِيْنَ

"(நபியே!) நாம் வஹீ மூலம் உம் மீது இந்தக் குர்ஆனை அருள் செய்து மிக அழகான வரலாற்றை உமக்கு நாம் கூறுகின்றோம். இதற்கு முன் (இது குறித்து) ஏதும் அறியாதவர்களில் (ஒருவராய்) நீர் இருந்தீர்."

(ஸூறா யூஸுப்:03)

ஏன் அல்குர்ஆன் நபி யூஸுப் (அலை) அவர்களின் வரலாற்றை இங்கு அஹ்ஸனுல் கஸஸ் - மிக அழகான கதை, மிகச் சிறந்த கதை என்று வர்ணிக்கின்றது தெரியுமா?

சிறையில் கைதியாக அடைபட்டிருப்பவர்
ஒரு நாள் விடுதலை பெற்று வெளியே வருவார்.

நோயாளிக்கு ஒரு நாள் குணம் கிடைக்கும்.

பிரிவுக்குப் பிறகு மீண்டும் உறவு கிட்டும்!
பிரிந்தவர் மீண்டும் சேர்வர்.

கவலைகள் ஒரு நாள் தீரும்.

கஷ்டங்கள் ஒரு நாள் நீங்கும்.

பொறுமைக்குக் கிடைக்கும் பரிசு மகத்தானது.

மன்னிக்கும் குணம் அற்புதமானது.

இறுதி வெற்றி சத்தியத்திற்கே கிடைக்கும்.

நல்லெண்ணம் வீண் போகாது!

சுபமான பார்வை சுபமான வாழ்வைத் தரும்.

இத்தகைய அழகான, அற்புதமான, சுபமான பல செய்திகளை எல்லாம் சொல்லுகின்ற கதையாக நபி யூஸுப் (அலை) அவர்களின் கதை அமைந்துள்ளது.

இதனாலேயே அவர்களின் கதையை அல்குர்ஆன் அஹ்ஸனுல் கஸஸ் - மிக அழகான கதை, மிகச் சிறந்த கதை என்று வர்ணிக்கின்றது!

கவலைகளை சுமந்திருப்போர், சோதனைகளுக்கு முகங்கொடுத்திருப்போர் ஸூறா யூஸுபை ஓதி வந்தால் நல்ல பலன் கிட்டும்.

இந்த ஸூறாவைப் படிப்பது நிச்சயம் மனதுக்கு ஆறுதலையும் தெம்பையும் புத்துணர்வையும் தரும்.

அமர்வு

# 27

அமெரிக்க மஸ்ஜிதொன்றில் நடந்த சம்பவம் இது.

சம்பவத்தைச் சொல்பவர் அந்த மஸ்ஜிதின் இமாம்:

ஒரு நாள் நான் மக்ரிப் தொழுகையை நிறைவேற்றி ஸலாம் கொடுத்த கையோடு ஒரு கருப்பின இளைஞன் என்னை நோக்கி விரைந்து வந்தான்.

நான் இதற்கு முன்னர் நமது மஸ்ஜிதில் அவனைப் பார்த்ததில்லை. வந்தவன் ஸலாம் சொல்லிவிட்டு தனக்கு சற்று ஒலி வாங்கியைப் பயன்படுத்த அனுமதி தருமாறு கேட்டான்.

நான் அனுமதிக்கவே ஒலி வாங்கியை கையில் எடுத்த அவன், அங்கே ஸப்புகளில் அமர்ந்திருந்தவர்களை நோக்கி ஸலாம் சொல்லி விட்டு ஸூறத்துல் பாத்திஹாவை ஒவ்வொரு வசனமாக ஓதலானான்.

அவனால் அதைத் திருத்தமாக ஓத முடியாமல் இருந்தது! திக்கித் திக்கி மிகவும் சிரமத்துடனேயே ஒவ்வோர் ஆயத்தையும் ஓதினான்.

ஓதி முடித்து ஒலி வாங்கியை உரிய இடத்தில் வைத்தவன் மஸ்ஜிதின்

ஒரு பக்கமாகச் சென்று இரண்டு றக்அத்கள் ஸுன்னத் தொழுது விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

நானும் அவன் பின்னால் சென்றேன். யார் இந்த இளைஞன், ஸூறத்துல் பாத்திஹாவை ஒழுங்காக ஓதத் தெரியாத போதும் அவன் ஏன் இவ்வளவு சிரமப்பட்டு அதை இங்கு ஓத வேண்டும் என்பன போன்ற கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்த வண்ணம் இருந்தன. அவனை நெருங்கிய நான் எனது கேள்விகளை அவனிடம் கேட்டேன்.

அதற்கு அவன் சொன்ன பதில்:

எனது பெயர் லூன்(loon). நானொரு "ராப்" பாடகன் (Rapper). இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இஸ்லாத்தைத் தழுவினேன்.

எனது தற்போதைய பெயர் ஆமிர் ஜுனைத். நான் இன்று இஸ்லாம் பற்றிய ஒரு புத்தகம் வாசித்தேன். அதில், "நான் சொன்ன ஒரேயொரு வசனம் (ஆயத்) உங்களுக்குக் கிடைத்தாலும் அதனை அடுத்தவர் களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்ற நபிமொழியைப் பார்த்தேன்.

எனக்கு இப்போதைக்கு ஸூரத்துல் பாத்திஹா தெரியும். அதை ஓரளவு ஓதவும் தெரியும். எனவே இப்போதைக்கு எனக்கு ஏழு வசனங்கள் தெரியுமல்லவா! அதனை நான் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமல்லவா என்று யோசித்தேன். அதனாலேயே இங்கே மக்களுக்கு அதனை ஓதிக் காண்பித்தேன்" என்று சொன்னான்.

லூன் ஒரு பிரபல ராப் பாடகராக (rapper) இருந்தவர். 2008 அளவில் இஸ்லாத்தை ஏற்ற இவர் இசைத்துறைக்கு முழுமையாக விடை கொடுத்து விட்டு அழைப்புப் பணிக்காக தன் வாழ்வை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். இன்று வரை அவர் அமெரிக்காவில் மிகவும் ஆர்வத் தோடு இறை பணியில் ஈடுபட்டு வருகின்றார். பெருந்தொகையா னோர் அவரது பிரச்சார முயற்சியால் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டு வருகின்றனர்.

லூன் போன்றவர்களின் கதைகளை படிக்கும் போதெல்லாம் பின்வரும் அல்குர்ஆன் வசனம் நம்மைப் போன்ற பரம்பரை முஸ்லிம் களின் நினைவுக்கு நிச்சயம் வரும்; வர வேண்டும்.

وَاِنْ تَتَوَلَّوْا يَسْتَـبْدِلْ قَوْمًا غَيْرَكُمْ ثُمَّ لَا يَكُوْنُوْا اَمْثَالَـكُم

"(சத்தியத்தை) நீங்கள் புறக்கணிப்பீர்களாயின், நீங்கள் அல்லாத (வேறு ஒரு) சமூகத்தாரை அவன் உங்களுக்குப் பதிலாகக் கொண்டு வருவான். அவர்கள் உங்களைப் போன்று இருக்கமாட்டார்கள்."

(47:38)

## அமர்வு 28

இறுதி முடிவு நல்ல முடிவாக அமைய வேண்டுமா?

மஸ்ஜிதில் இருக்கின்ற போதோ அல்லது தொழுகை விரிப்பிலோ அல்லது அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும் நிலையிலோ அல்லது திக்ர் செய்து கொண்டிருக்கும் போதோ ஒருவருக்கு மரணம் சம்பவிக்க வேண்டும். அதுதான் ஹுஸ்னுல் காத்திமா - இறுதி முடிவு நல்ல முடிவாக அமைய ஒரே வழி என்று சொல்வதற்கில்லை.

நபி (ஸல்) அவர்கள் கூட தனது படுக்கை விரிப்பில் ஆயிஷா (றழி) அவர்களின் மடியில்தான் வபாத்தானார்கள்.

ஹுஸ்னுல் காத்திமா என்பது உள்ளத்தில் இறைமறுப்போ, நிராகரிப்போ, நயவஞ்சகமோ, இணைவைப்போ இல்லாத நிலையில் ஒருவருக்கு மரணம் சம்பவிப்பதாகும்.

ஹுஸ்னுல் காத்திமா என்பது அடுத்தவர்களின் பொருளிலோ, மானத்திலோ கைவைக்காத நிலையில் ஒருவருக்கு மரணம் சம்பவிப்பதாகும்.

ஹுஸ்னுல் காத்திமா என்பது எவர் மீதும் பகைமை பாராட்டாத நிலையில், எவர் மீதும் வெறுப்போ, காழ்ப்புணர்வோ இல்லாத நிலையில் தூய்மையான உள்ளத்தோடு மரணிப்பதாகும்.

ஹுஸ்னுல் காத்திமா என்பது அல்லாஹ்வுக்குரிய கடமைகளையும், அடுத்த மனிதர்களுக்குரிய கடமைகளையும் நிறைவாக நிறைவேற்றிய நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்கும் பேற்றைப் பெறுவதாகும்.

## அமர்வு 29

ஒரு மனிதர் இருந்தார். அவர் கண்பார்வையை இழந்தவர். கை, கால் இரண்டும் ஊனமுற்றவர். இந்நிலையிலிருந்த அவர் உணர்வு-பூர்வமாக "அல்ஹம்துலில்லாஹ்" எனக் கூறி அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

இதனைப் பார்த்த மற்றொருவர், "என்ன இது? உமக்கோ கண் பார்வையில்லை, கைகள் இல்லை, கால்களும் இல்லை. நீர் முடமாகக் கிடக்கின்றீர். "அல்ஹம்துலில்லாஹ்" என்று சொல்லி அவனைப் புகழ உம்மிடம் என்னதான் இருக்கின்றது" எனக் கேட்டார்.

அதற்கு அந்த மனிதரோ,
என்னிடம் என்ன இருக்கின்றதா!?
அவனுக்கு நன்றி சொல்ல எனக்கு ஒரு நா இருக்கின்றது!
அவனை அஞ்சிப் பயப்பட ஓர் இதயம் இருக்கின்றது!
சோதனைகளுக்கு முன்னால் பொறுமை காக்க ஓர் உடல் இருக்கின்றது!
இவற்றுக்காக அவனுக்கு நான் நன்றி சொல்லாமல் இருக்க முடியுமா?" எனக் கூறினார்.

இந்த மனிதரே அல்லாஹ்வைப் புகழ்கின்றார்; அவனுக்கு நன்றி பாராட்டுகின்றார் என்றிருந்தால் நானும் நீங்களும் எந்தளவு தூரம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்! என்று சிந்திக்க வேண்டும்.

முன், பின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்ட ரஸூலுல் லாஹி (ஸல்) அவர்கள் இரவெல்லாம் கால் வீங்கும் அளவுக்கு நின்று வணங்குவார்கள் என்றால், எதற்காக...? அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

"நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஓர் அடியானாக இருக்க வேண்டாமா!?" என்பார்கள் நபியவர்கள்.

அல்லாஹ்வின் அருள்களையும் அருட்கொடைகளையும் மேலும் மேலும் நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா! அதற்கான சிறந்த வழி அல்லாஹ்வுக்கு அதிகமதிகம் நன்றி செலுத்துவதுதான்.

அல்லாஹ் சொல்கின்றான்:

> "நீங்கள் (எனக்கு வழிப்படுவதன் மூலம்) எனக்கு நன்றி செலுத்தினால் நான் எனது அருட்கொடைகளை மேலும் உங்களுக்கு அதிகரித்துத் தருவேன்."
>
> (ஸூறா இப்றாஹீம்:07)

அல்லாஹ் தனது அடியார்கள் தனக்கு நன்றி பாராட்டுபவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்:

> فَٱذْكُرُونِىٓ أَذْكُرْكُمْ وَٱشْكُرُوا۟ لِى وَلَا تَكْفُرُونِ
>
> "ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூருங்கள்.
> நானும் உங்களை நினைவு கூர்வேன்.
> இன்னும், நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்.
> எனக்கு மாறு செய்யாதீர்கள்."

அல்லாஹ் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை விளித்துச் சொல் கின்றான்:

وكن من الشاكرين

"மேலும் நீர் நன்றி செலுத்துபவர்களில் ஒருவராக இருப்பீராக."

இதே விஷயத்தை நபி மூஸாவைப் பார்த்தும் சொல்லுகின்றான்.

மு.்.மீன்களுக்கும் இதே கட்டளையை பிறப்பிக்கின்றான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُلُواْ مِن طَيِّبَٰتِ مَا رَزَقْنَٰكُمْ وَٱشْكُرُواْ لِلَّهِ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ

"நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ள வற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்! நீங்கள் அல்லாஹ் வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்."

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான முறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவதாக, அல்லாஹ் நம்மீது சொறிந்துள்ள அருட்கொடை-களை உள்ளத்தால் ஏற்க வேண்டும்.

அவற்றைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டும். அவற்றுக் காக அல்லாஹ்வை வாய் விட்டுப் புகழ வேண்டும்.

அவன் அருளிய நி.்.மத்துக்களை அவனுக்கு வழிபடும் விஷயங்களில் பயன்படுத்த வேண்டும்.

இவை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான வழிகள்.

அதிகாலையில் கண்விழித்தவுடன் தூக்கத்தின் மூலம் நம்மை மரணிக்கச் செய்து மீண்டும் விழிக்கச் செய்து நமக்கு உயிரளித்த அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி சொல்கின்றோம்.

தொழுகை உட்பட நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் அமைந்தவைதான்.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர் பெறும் நன்மைகள் பல.

ஆரம்பமாக "ஷுக்ர்" மு.்.மினின் அடிப்படையான ஒரு பண்பு.

அது அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுதற்கான சிறந்த வழி.

அவனது அருட்கொடைகளை மேலும் மேலும் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியும் கூட.

ஈருலகிலும் அல்லாஹ்வுடைய தண்டனைகளிலிருந்தும் தப்பிக் கொள்ளவும் மறுமையில் நிறைவான நற்கூலியைப் பெற்றுக் கொள்ளவும் அவனுக்கு நன்றி செலுத்தி வாழ்வது உதவும்.

நன்றியுள்ள நல்லடியார்களாக வாழ்வோம்! நலம் பெறுவோம்!

# அமர்வு 30

## "றிஸ்க்" என்றால் என்னவென்று தெரியுமா?

ஒருவர் ஆகாரத்தையும் பொருட்செல்வத்தையும் பெற்றிருப்பது மாத்திரமல்ல "றிஸ்க்" என்பது!

உடல் ஆரோக்கியத்தைப் பெற்றிருப்பது றிஸ்க்!

நல்ல வாழ்க்கைத் துணைவியைப் பெற்றிருப்பது றிஸ்க்!

நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பது றிஸ்க்!

நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பது றிஸ்க்!

அறிவும் ஒரு வகை றிஸ்க் ஆகும்!

இவ்வாறு றிஸ்கின் வகைகள் பல. அதன் பட்டியல் மிக நீண்டது.

றிஸ்குடைய வகைகளில் மிகச் சாதாரணமானதே பொருட் செல்வம் - உணவு, உடை, காசு, பணம் முதலியன.

றிஸ்கில் சிறந்தது...
நல்ல வாழ்க்கைத் துணை!
நல்ல, ஸாலிஹான பிள்ளைகள்!

அதில் உயர்ந்தது... உடல்நலம்!

அதில் சிறப்பிடம் பெறுவது... அறிவு ஞானம்!

றிஸ்கில் முழுமையானது...
அல்லாஹ்வின் திருப்தி! - திருப்பொருத்தம்!

وَرِضْوَانٌ مِّنَ اللّٰهِ اَكْبَرُ ؕ ذٰ لِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ

"அல்லாஹ்வின் திருப்திதான் மிகப்பெரியது.
அதுதான் மகத்தான வெற்றி." (9:72)

றிஸ்கின் வகைகளில் மொத்தமானதும் முழுமையானதுமான றிழா எனும் அல்லாஹ்வின் திருப்தியை அடையும் பாதையில் முழு வீச்சோடு பயணிப்போம்!

அனைத்து வகையான றிஸ்குகளையும் வழங்குபவன் அல்லாஹ்வே. அவனே றஸ்ஸாக்.

அரசனும் ஆண்டியும், பணக்காரனும் ஏழையும், தொழில் அதிபரும் தொழிலாளியும், அறிஞனும் பாமரனும், ஆசிரியனும் மாணவனும் அனைவரும் றஸ்ஸாக்குடைய அப்துகளே - அப்துர் றஸ்ஸாக்குகளே அன்றி அவர்களில் எவரும் றஸ்ஸாக்குகளல்ல என்ற பேருண்மையையும் மனதிற் கொள்வோம்.

# அமர்வு 31

யார் அல்லாஹ்வுடன் இருக்கின்றாரோ அவர் பாக்கியசாலி! யாருடன் அல்லாஹ் இருக்கின்றானோ அவர் மிகப் பெரும் பாக்கியசாலி.

ஒருவர் ஆரம்பமாக அல்லாஹ்வோடு உறவு வைப்பவராக மாற வேண்டும். அந்த உறவு ஆரோக்கியமானதாக மாறும்போது அல்லாஹ் அவரோடு உறவு பாராட்டுபவனாக மாறுவான். இதன் விளைவாக அவர் அல்லாஹ்வுடன் இருக்கும் நிலைமாறி அல்லாஹ் அவருடன் இருக்கும் நிலை உருவாகும்.

ஒருவர் இந்நிலையை அடைந்து விட்டால் அவரைப் போன்ற மற்றொரு பாக்கியவான் இவ்வுலகில் இருக்க முடியாது.

ஓர் அறிஞர் இப்படிச் சொன்னார்:

“இறைவா! உன்னை அடைந்தவர் எதை இழந்தார்?
உன்னை இழந்தவர் எதை அடைந்தார்?”

எனவே, நாம் அல்லாஹ்வுடன் இருக்கவும், வாழவும் பழகுவோம். அவன் நம்மோடு இருக்கும் உயர் நிலையை அடைவதற்கு முயற்சி செய்வோம்!

அமர்வு

# 32

அநியாயம் செய்யாதீர்!

நியாயமில்லாமல் ஒரு பூனைக்கோ, நாய்க்கோ, பன்றிக்கோ நோவினை செய்வதும் கூட பாவமாகும்.

அப்படி இருக்கும் போது ஒரு மனிதனுக்கு அநியாயம் செய்வது எவ்வளவு பெரிய பாவமாக இருக்கும்!

அதிலும் குறிப்பாக சகோதர முஸ்லிமுக்கு அநீதி இழைப்பது எந்தளவு தூரம் பாரதூரமான பாவமாக இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அநியாயம் செய்வது பயங்கரமானது. அதன் விளைவுகள் பாரதூர மானவை.

"அநீதி இழைப்பதைப் பயந்து கொள்ளுங்கள். அநீதி, மறுமை நாளில் பல இருள்களாகக் காட்சி தரும்"

(முஸ்லிம்)

என்பது நபியவர்களின் எச்சரிக்கை.

"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்க மாட்டான். அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான்...." (புகாரி) என்பதும் ஒரு நபி மொழி ஆகும்.

அநியாயம் செய்வோரின் நிலை - அவர்கள் பெரிய வணக்க வாளிகளாகவும் நற்காரியங்களில் ஈடுபடுவோராகவும் இருந்தாலும்- நாளை மறுமையில் எவ்வளவு அவலமாக அமையும் என்பதை விளக்கும் ஹதீஸை நாம் அடிக்கடி நினைவுபடுத்த வேண்டும்.

அந்த ஹதீஸ் பின்வருமாறு:
"வங்கரோத்துக்காரன் யார் என்பது உங்களுக்கு தெரியுமா?" என நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களைப் பார்த்துக் கேட்டார்கள். "யாரிடம் காசோ, பொருளோ இல்லையோ அவர்தான்" என்று அவர்கள் கூறினார்கள். அப்போது நபியவர்கள், "எனது உம்மத்தில் வங்கரோத்துக்காரன் யாரெனில், நாளை மறுமையில் ஒருவர் தொழுகை, நோன்பு, ஜகாத் ஆகிய கடமைகளை நிறைவேற்றிய நிலையில் வருவார். ஆயினும் அவர் ஒருவரைத் திட்டியிருப்பார்! இன்னொருவர் மீது அவதூறு கூறியிருப்பார்! மற்றொருவரின் பொருளை விழுங்கியிருப்பார்! வேறொருவரின் இரத்தத்தை ஓட்டியிருப்பார்! இன்னொருவரை அடித்திருப்பார். இவரால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இவரது நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படும். கணக்குத் தீர்வதற்கு முன்னால் இவரது நன்மைகள் முடிந்து விட்டால் பாதிக்கப்பட்டவர்களின் பாவங்கள் எடுக்கப்பட்டு இவர் மேல் சுமத்தப்படும். பின்னர் இவர் நரகில் எறியப்படுவார்" என்று விளக்கினார்கள்.

(முஸ்லிம், திர்மிதி)

எனவே, எவருக்கும் சொல்லாலோ அல்லது செயலாலோ அநியாயம் செய்யலாகாது. நண்பனோ, எதிரியோ யாராக இருந்தாலும் எவருக்கும் எம்மால் அநீதி இழைக்கப்படலாகாது.

"அநீதி இழைக்கப்பட்டவரின் பிரார்த்தனையைப் பயந்து கொள்ளுங்கள். அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் திரை இல்லை" (புகாரி) என்ற நபி மொழியையும் என்றும் மனதில் கொள்வோம்.

அனைவருடனும் நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்வோம். நமது ஆன்மீக வாழ்வின் வெற்றிக்கு இது இன்றியமையாதது.

## அமர்வு 33

வெற்றிக்கான விதிகள் மூன்று:

اتقِ اللهَ حيثُما كنتَ وأتبعِ السيئةَ الحسنةَ تمحُها وخالقِ الناسَ بخُلقٍ حسنٍ

"நீ எங்கிருந்த போதும் அல்லாஹ்வைப் பயந்து கொள். நீ ஒரு தீமையைச் செய்து விட்டால் உடனே ஒரு நன்மையைச் செய்து விடு. அது (அந்த நன்மையானது) அதனை (அந்தத் தீமையை) அழித்து விடும். மேலும் நீ மனிதர்களுடன் பண்பாடாக நடந்து கொள்."

(திர்மிதி, அஹ்மத்)

இந்த நபிமொழி வெற்றிக்கான முப்பெரும் விதிகளை கோடிட்டுக் காட்டுகிறது. அவையாவன:

**01** படைப்பாளன் அல்லாஹ்வுடனான உறவு தொடர்பி லான விதி:

اتق الله حيثما كنت

"நீ எங்கிருந்தபோதும் அல்லாஹ்வைப் பயந்து கொள்."

02

தன்னுடனான, தனது ஆன்மாவுடனான தொடர்பு பற்றிய விதி:

وأتبع السيئة الحسنة تمحها

"நீ ஒரு தீமையைச் செய்து விட்டால் உடன் ஒரு நன்மையைச் செய்து விடு. அது (அந்த நன்மை யானது) அதனை (அந்தத் தீமையை) அழித்து விடும்."

03

படைப்புகளான பிற மனிதர்களுடனான தொடர்பு பற்றிய விதி:

وخالقِ الناسَ بخُلقٍ حسنٍ

"நீ மனிதர்களுடன் பண்பாடாக நடந்து கொள்."

# அமர்வு 34

عن هانئ مولى عثمان قال: كان عثمان إذا وقف على قبر بَكى حتى يَبُلَّ لحيته، فقيل له: تَذْكُر الجنة والنار فلا تَبكي وتبكي مِن هذا؟ فقال: إن رسول الله - صلى الله عليه وسلم- قال: «إنَّ القبرَ أولُ مَنْزِل من منازل الآخرة، فإنْ نجا منه فما بعده أيسر منه، وإنْ لم ينجُ منه فما بعده أشد منه».

உஸ்மான் (றழி) அவர்களின் "மௌலா"வாக இருந்த ஹானி (றழி) அவர்கள் சொல்கிறார்கள்:

உஸ்மான் (றழி) ஒரு கப்றுக்கு அருகாமையில் நின்றால் தாடி நனையும் அளவு அழுவார்கள். "சுவனம், நரகம் பற்றி நினைத்துக் கூட நீங்கள் அழுவதில்லையே! ஆனால் கப்றை நினைத்து மாத்திரம் ஏன் இப்படி அழுகின்றீர்கள்?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"கப்றே, மறுமை வாழ்வின் முதல் தரிப்பிடமாகும். கப்றில் ஒருவர் தப்பிவிட்டால் அடுத்து வரும் எல்லா நிலைகளும் அவருக்கு இலகுவானதாக அமைந்துவிடும். யார் அங்கு தப்பிக் கொள்ளவில்லையோ அவருக்கு அடுத்தடுத்து வரும் நிலைகள் மிகக் கடுமையானதாகவே இருக்கும்."

மேலும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்:
"கப்றை விட மிக மோசமான ஒரு காட்சியை நான் கண்டதில்லை"

(நூல்: இப்னு மாஜா)

கப்று சுவனத்தின் ஒரு பூஞ்சோலையாகவோ அல்லது நரகத்தின் ஒரு படுகுழியாவோ இருக்கும் என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

நாம் மரணம், சுவனம், நரகம் ஆகியன பற்றி அடிக்கடி ஞாபகப் படுத்துவது போல நமது மறுமை வாழ்வின் ஆரம்ப கட்டமாக அமைய இருக்கும் கப்றுடைய வாழ்வையும் அதிகம் நினைவு கூர வேண்டும்.

ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்தி சுவனம் நோக்கிய நமது பயணத்தை வெற்றிகரமாகத் தொடர இந்த நினைவு பேருதவியாக அமையும்.

❝

வல்ல றஹ்மான்
கப்றுடைய வேதனையிலிருந்து
நம்மனைவரையும் காத்தருள்வானாக!

நமது கப்றுகளை
சுவனத்துச் சோலைகளாக
ஆக்கியருள்வானாக!

## அமர்வு 35

### உனக்கு நீயே!

எந்தவொரு நண்பனும் உனது வலியை உன்னோடு சேர்ந்து பகிர்ந்து கொள்ளப் போவதில்லை!
எந்தவொரு அன்பனும் நீ அனுபவிக்கும் நோவை உன் சார்பில் சுமந்து கொள்ளப் போவதில்லை!
உனக்குப் பதிலாக எந்தவோர் உறவும் இரவில் கண் விழித்திருக்கப் போவதில்லை!
உன்னை நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்! பாதுகாத்துக் கொள்ள வேண்டும்! ஆறுதல் படுத்திக் கொள்ள வேண்டும்!
நீ மனமுடைந்து போகும் சந்தர்ப்பங்களில் நீதான் உனக்கு ஒத்தடம் போட்டுக்கொள்ள வேண்டும்!
வேறு எவரும் அதைச் செய்யப் போவதில்லை!
நீ தோல்வி காணும் வேளைகளில் உனது மனோவலிமை மட்டுமே உனக்கு துணை நிற்க முடியும்!
நீ மீண்டும் எழுந்து நிற்பது உன்னால் மாத்திரமே முடியுமான காரியமாக இருக்கும்!

உனது பெறுமதியை மனிதர்களின் கண்களில் தேடாதே! அதனை உனது மனதில் தேடு. அது உன்னில் திருப்தி கண்டால் உனது நிலை உயர்வானதுதான்.

வெளியீடு BookMark The Online Book Store

உலக வாழ்வு தொடர்பான கவலையை
நீ சுமக்க வேண்டியதில்லை. அது அல்லாஹ்வுக்குரியது!

வாழ்வாதாரம் தொடர்பிலான கவலையும்
உனக்கு வேண்டாம்! அது அல்லாஹ்வின் பக்கமிருந்து வருவது!

எதிர்காலம் பற்றிய கவலையும் உனக்கு அவசியப்படாது!
அது அல்லாஹ்வின் கையில் இருப்பது!

நீ சுமக்க வேண்டியதெல்லாம் ஒரே ஒரு கவலையைத்தான்!
அதுதான் அல்லாஹ்வை எப்படி நான் திருப்திப்படுத்தலாம்?
என்ற கவலை!

நீ அவனை மாத்திரம் திருப்திப்படுத்திவிட்டால் போதும்!
அவன் நிச்சயம் உன்னை திருப்திப்படுத்துவான்!
உனக்கு அனைத்தையும் தருவான்! நிறைவாகத் தருவான்!

உனது மனதை அழவைத்த வாழ்வைப் பார்த்து நிராசை கொள்ளாதே!

"யா அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும்
நல்ல பிரதியீட்டைத் தந்தருள்வாயாக" என்று கேள்!

உன் கவலை நீங்க ஒரு ஸஜ்தா போதுமானதாக இருக்கும்!

மகிழ்ச்சியை வரவழைக்க ஒரு துஆ போதுமானதாக அமையும்.

(இந்த உபதேசத்தை செய்தவர் யார் என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. சிலர் இது அலி (றழி) அவர்களின் ஒரு உபதேசம் என்பர். மற்றும் சிலர் இதனை மறுப்பர். மேலும் சிலர் இது இமாம் இப்னுல் கையிமுடைய உபதேசம் என்பர். இன்னும் சிலர் இதனை மறுப்பர். இதில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை வரவேற்போர் பலர். விமர்சனம் செய்வோரும் உளர். இது யாருடைய உபதேசமாக இருந்தாலும் நம் அனைவருக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று என நாங்கள் நம்புகிறோம்.)

## அமர்வு

# 36

ஒரு கசப்பான உண்மை!

உங்களது மரணத்திற்குப் பிறகு உலகம் உங்களை எப்படிப் பார்க்கும்!

உங்கள் விஷயத்தில் உலகத்தார் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை நீங்கள் அறிய ஆசைப்பட்டால், மற்றொருவர் மரணமான பின் அவர் தொடர்பில் உலகத்தார் எப்படி நடந்து கொள்கின்றார்கள் என்பதைப் பாருங்கள்.

மரணித்தவரை அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள் கூட காலப் போக்கில் எப்படி மறந்துவிடுகின்றார்கள். அவர்களின் உலக சோலிகள் அவர்களை எப்படி அவரது நினைவை மறக்கடிக்கச் செய்கின்றன என்பதை நீங்கள் கண்கூடாகக் காண்பீர்கள்.

இதே நிலைதான் உங்ளுக்கும் ஏற்படும். நீங்கள் உயிருக்கு உயிராக நேசித்தோரும் அப்படி உங்களை நேசித்தோரும் கூட உங்களை சிறிது காலத்தில் மறந்துவிடுவார்கள். உங்களை நினைவு கூரவோ உங்களை நினைத்து கவலைப்படவோ அவர்களுக்கு நேரமிருக்காது.

இந்த உண்மையை உணர்ந்து உங்களது முழு வாழ்வையும் அல்லாஹ்வுக்காக அமைத்துக் கொள்வதே புத்திசாலித்தனமானது! பொருத்தமானது!

ஏனென்றால் அவன் உங்களை மறக்கப் போவதில்லை! கைவிடப் போவதுமில்லை! அவனுடனான உறவை பலப்படுத்திக் கொள்ளுங்கள்! அவன் நிலையானவன்; நித்திய ஜீவன். எனவே அவனது அன்பும் அருளும் அறுபடாமல் என்றும் நிலைத்திருக்கும்.

# அமர்வு 37

## இன்னும் 100 ஆண்டுகளின் பின்....

இன்னும் நூறு வருடங்களில் நானும் நீங்களும் நம்மில் எவரும் இந்தப் பூமிப்பந்தில் இருக்கப் போவதில்லை என்பது ஒரு யதார்த்தம்.

அப்போது நாம் கஷ்டப்பட்டு உழைத்து, சம்பாதித்துக் கட்டிய வீடுகளில் யாரோ, எவரோ குடியிருப்பார்கள்!

நாம் வேலை பார்த்த இடங்களில், நாம் வகித்த பதவிகளில் வேறு ஆட்கள் இருப்பார்கள்!

அப்போது என்னை, உங்களை நினைவு கூர்பவர்கள் இருப்பார்களா? எத்தனை பேர் இருப்பார்கள்?

அவர்கள் எப்போதெல்லாம் எம்மை நினைவுபடுத்துவார்கள் என்பது சந்தேகத்திற்குரிய விஷயம்.

நாம் நமது பூட்டனாரை, பூட்டியை வாழ்வில் எத்தனை முறை நினைவு படுத்தியிருக்கின்றோம்!

நாம் நமது பாட்டனாரை, பாட்டியை கடைசியாக எப்போது நினைவு கூர்ந்தோம்? நினைத்துப் பார்த்தோம்!

நானும், நீங்களும் எந்தவொரு உலக வாழ்க்கையை அலட்டிக் கொள்கின்றோமோ, எந்தவொரு வாழ்க்கைக்காக கவலை கொள்கின்றோமோ, பலபோது கண்ணீர் வடிக்கின்றோமோ, எந்த வொரு வாழ்க்கைக்காக போட்டா போட்டி போடுகின்றோமோ, பொறாமை கொள்கின்றோமோ, புறம் பேசுகின்றோமோ, பகைமை பாராட்டுகின்றோமோ, வெறுப்புக் கொள்கின்றோமோ அந்த வாழ்க்கை இன்னும் நூறு ஆண்டுகளில் முடிந்திருக்கும்.

நமக்கு முன்னரும் எத்தனை எத்தனை பரம்பரைகள் இப்படி வாழ்ந்து விட்டுப் போய்விட்டார்கள். நமக்குப் பிறகும் அப்படி பல பரம்பரைகள் வரும் போகும். இது ஒரு தொடர் கதை.

உலக வாழ்வின் இந்த யதார்த்தத்தை - நிலையற்ற தன்மையை நாம் புரிந்து செயற்படத் தவறினால் நாம் பெரும் நஷ்டவாளிகளாக மாறி விடுவோம்.

### யார் இந்த தற்காலிக வாழ்வில் புத்திசாலியாக இருக்க முடியும்!

கிடைத்துள்ள குறுகிய ஆயுளை வெறுமனே நுகரந்து முடிக்காமல் இதனை முதலீடு செய்பவரே புத்திசாலி.

"தனது ஆசாபாசங்களை அடக்கி மரணத்திற்கு பின்புள்ள வாழ்வுக் காக செயற்படுபவனே புத்திசாலி" என்பது நபி வாக்கு. (திர்மிதி)

பணம், பட்டம், பதவி, பேர், புகழ் என்று உலக மாயைகளில் சிக்கி தனது வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இறுதி நேரத்தில் கவலை கொள்வதில், கைசேதப்படுவதில் புண்ணியமில்லை.

எந்தவொரு மனிதனும் இந்த உலகை விட்டும் பிரியும் தருவாயில் எப்படி அங்கலாய்ப்பான் என்பதையும் அப்போது அவன் அங்கலாய்ப் -பதில் எந்தப் பயனும் இருக்காது என்பதையும் புனித அல்குர்ஆன் அற்புதமாக சித்தரிக்கிறது:

அவர்களில் ஒருவருக்கு மரணம் வரும்போது, அவர்:
என் இறைவனே! என்னைத் (உலகுக்குத்) திருப்பி அனுப்புவாயாக! என்று கூறுவான். நான் செய்யாமல் விட்டுவந்த நல்ல காரியங்களைச் செய்வதற்காக (என்றும் கூறுவான்).

இந்த கோரிக்கைக்கு இறைவன் அளிக்கும் பதில் மிகக் கடுமை யானதாக இருக்கும்.
அவ்வாறில்லை! அது சரிவராது. அவன் கூறுவது வெறும் வார்த்தையே.(யன்றி வேறில்லை.) (23:99,100)

ஒரு மனிதன் தனது இறுதி நேரக் கவலையை எப்படி வெளிப்படுத் துவான் என்பதை அல்குர்ஆன் மற்றோர் இடத்தில் பின்வருமாறு குறிப் பிடுகின்றது:

"என் (மறுமை) வாழ்க்கைக்காக நன்மைகளை நான் முன் கூட்டியே செய்திருக்க வேண்டுமே!" என்று அப்போது மனிதன் கூறுவான். (89:24)

இன்னுமோர் இடத்தில் அல்குர்ஆன் இப்படிக் குறிப்பிடுகின்றது:
"அந்நாளில் அநியாயம் இழைத்துக் கொண்டவன் தன்னிரு கைகளையும் கடித்துக்கொண்டு, "அந்தத் தூதருடன் நானும் - (நேரான) வழியை எடுத்துக் கொண்டிருக்க வேண்டாமா?" எனக் கூறுவான்."

"எனக்கு வந்த கேடே! (என்னை வழி கெடுத்த) ஒருவனை நான் நண்பனாக ஆக்கிக் கொள்ளாது இருந்திருக்க வேண்டுமே?"

"நிச்சயமாக, என்னிடம் நல்லுபதேசம் வந்த பின்னரும் அதிலி ருந்து அவன் என்னை வழி கெடுத்தானே! மேலும் ஷைத்தான் மனித னுக்கு மிகவும் சதி செய்பவனாக இருக்கிறான்!" (என்று புலம்புவான்.)"
(25:27-29)

பெரும்பாலான மனிதர்கள் உலக வாழ்க்கையின் உண்மைகளை மறந்து உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மரணத்தை அடுத்தே அவர்கள் விழித்துக் கொள்வார்கள்.

(அலி (றழி) அவர்கள்)

நாம் அவ்வாறானவர்களாக இருந்து விடக்கூடாது. வாழும் போதே நாம் விழித்துக் கொள்ள வேண்டும். விழிப்புடன் இருக்க வேண்டும்.

உலக வாழ்வு பற்றிய உண்மைகளைப் புரிந்து நிலையான மறுமை வாழ்வுக்காக எம்மைத் தயார்படுத்தும் முயற்சியில் முனைப்புக் காட்ட வேண்டும்.

இந்த வகையில் ஒரு பக்கம் இறைவனுக்குரிய கடமைகளை நிறைவாக நிறைவேற்றுவதில் நமது கவனத்தைக் குவிக்க வேண்டும்.

மறு பக்கம் மனிதர்களுக்குரிய கடமைகளை செவ்வனே நிறை வேற்றுவதில் ஆர்வம் கொள்ள வேண்டும்.

குறிப்பாக எல்லா மனிதர்களையும் ஜீவராசிகளையும் நேசிக்க வேண்டும். அன்பை விதைக்க வேண்டும். வெறுப்பை, பகை மையை, குரோதத்தை வேரறுக்க வேண்டும்.

நண்பனோ, எதிரியோ யாராக இருந்தாலும் எவருக்கும் எம்மால் அநீதி இழைக்கப்படலாகாது. அனைவருடனும் நீதியாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

நமது எஞ்சியுள்ள வாழ்க்கையை அர்த்தமுள்ள வகையில், பயன் மிக்க வகையில் அமைத்துக்கொள்ள வல்ல றஹ்மான் தௌபீக் செய்வானாக!

அமர்வு

# 38

அனைத்து நிலைகளிலும் அழகாக நடந்து கொள்வோம்!

ஒரு மு.்.மின் நாகரிகமானவன்; பண்பாடானவன். அவனது எல்லா செயற்பாடுகளும் அழகானதாகவும் ஒழுங்கானதாகவும் ஒழுக்கமானதாகவும் இருக்கும்.

அவன் இன்பத்திலும் துன்பத்திலும், கோபத்தின் போதும், மன்னிப்பின் போதும், ஒருவரை அணைக்கும் போதும், வெறுத்து ஒதுக்கும் போதும் கொடுக்கல், வாங்கல் அடங்கலான எல்லா நிலைகளிலும் நாகரிகமாகவும் அழகாகவும் இங்கிதமாகவும் நடந்து கொள்வான்.

பின்வரும் அல்குர்ஆன் வசனங்களைக் கவனியுங்கள்:

وَاهْجُرْهُمْ هَجْرًا جَمِيْلًا

"அழகான முறையில் அவர்களை விட்டும்
வெறுத்து ஒதுங்கி விடுவீராக!"

ஒருவரை வெறுத்து ஒதுக்கும் போதும் அவரை இம்சிக்காமலும், நோவிக்காமலும் பண்பாடாக நடந்து கொள்ள வேண்டும்.

فَاصْبِرْ صَبْرًا جَمِيلًا
"அழகிய பொறுமையுடன் பொறுப்பீராக!"

ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு நடந்துவிட்டு, அழுது புலம்பிவிட்டு பொறுமை காப்பது அழகான பொறுமையாக மாட்டாது.

فَاصْفَحِ الصَّفْحَ الْجَمِيْلَ

"(அவர்களின் தவறுகளை) அழகிய முறையில் மன்னித்து விடுவீராக!"

குற்றம் செய்தவரை சாடிவிட்டு, அவமானப்படுத்திவிட்டு அல்லது அசிங்கப்படுத்திவிட்டு அவரை மன்னிப்பது அழகிய மன்னிப்பல்ல.

பின்வரும் நபிமொழியையும் கருத்திற் கொள்ளுங்கள்:

أيُّها النَّاسُ اتَّقوا اللَّهَ وأجملوا في الطَّلبِ فإنَّ نفسًا لن تموتَ حتَّى تستوفِيَ رزقَها
وإن أبطأَ عنْها فاتَّقوا اللَّهَ وأجملوا في الطَّلبِ خذوا ما حلَّ ودعوا ما حَرُمَ
(صحيح ابن ماجه)

"மனிதர்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். (வாழ்வாதாரத்தை) அழகான முறையில் தேடுங்கள். எந்தவோர் ஆத்மாவும் அதற்குரிய வாழ்வாதாரத்தை -தாமதமானாலும்- முழுமையாகப் பெற்றுக் கொள்ளாமல் மரணிக்கப் போவதில்லை. எனவே அல்லாஹ்வைப் பயந்து (உங்களுக்குரிய வாழ்வாதாரத்தை) அழகாகத் தேடுங்கள். ஹலாலானதை பெற்றுக் கொண்டு ஹறாமானதை விட்டுவிடுங்கள்."

(இப்னு மாஜா)

பொருள் தேடலில், உழைப்பில் ஈடுபடும் போதும் மிகவும் அடக்கமாகவும் நாகரிகமாகவும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

பணம், பணம் என்று பதறி அடித்துக்கொண்டு ஓடலாகாது.

எப்படியாவது, எந்த வழியிலாவது பணம் பண்ண வேண்டும் என்ற பார்வை அசிங்கமானது.

அல்லாஹ் நமக்கென அளந்தது நமக்குக் கிடைக்காமல் இருக்கப் போவதில்லை என்ற உண்மையைப் புரிந்து பொருளீட்டலில் ஈடுபட வேண்டும்.

நமது கரங்களில் வந்து சேரும் செல்வம் ஹலாலானதாக இருக்கவும் வேண்டும், அது கண்ணியமான வழியில் பெறப்பட்டதாக இருக்கவும் வேண்டும்.

அமர்வு

# 39

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!

மனிதர்களில் பெரும்பாலானோரிடம் ஒரு பிழையான பார்வை இருக்கின்றது. தாமே துர்ப்பாக்கியசாலிகள். மற்றவர்களை விட மோசமாக சோதிக்கப்படுபவர்கள், துன்பத்தை அனுபவிப் பவர்கள் என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

இது உண்மையல்ல. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதே உண்மை.

ஒருவரிடம் பொருள் இருக்கும். உடல் ஆரோக்கியம் இருக்காது. ஒருவரிடம் இரண்டும் இருக்கும். வாழ்க்கைத் துணை பொருத்தமாக அமைந்திருக்காது. மூன்றையும் பெற்றவருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்திருக்காது. மற்றொன்றை அல்லது இன்னொன்றை அவர் பெற்றிருக்கமாட்டார்.

“ எல்லாவற்றையும் நிறைவாகப் பெற்றவர் யாரும் இல்லை! எவரும் இல்லை.

எனவே, எல்லோரும் - எந்த நிலையில் இருப்பவராக இருந்தாலும் - மன நிறைவோடும் சந்தோஷமாகவும் வாழ என்ன வழி தெரியுமா?

போதும் என்ற மனோ நிலையை பெற்றிருப்பதுதான் அதற்கான வழி.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பார்கள்.

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் வாழ்வே வாழ்வு என்பார்கள்.

அல்லாஹ் நம் ஒவ்வொருவருக்கும் நிறையவே தந்திருக்கின்றான். அவன் நமக்கு எதையெல்லாம் தரவில்லை என்று எண்ணிப் பார்த்து கவலைப்படுவதைவிட, எதையெல்லாம் தந்திருக்கின்றான் என்பதை எண்ணி அவனுக்கு நன்றி செலுத்தி சந்தோஷமாக வாழும் மனோ பாவத்தை வளர்த்துக் கொள்வதே நிறைவான வாழ்வு வாழ வழி.

போதும் என்கின்ற மனப்பான்மை உள்ளவர் - இருப்பதை வைத்து நிறைவாக வாழக் கற்றுக்கொண்டவர் - உண்மையான, மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெறுகிறார்.

பணம் இல்லாதவர், ஆரோக்கியம் இருக்கிறதே! என்று ஆறுதல் அடையலாம். ஆரோக்கியத்தை இழந்தவர், அறிவு இருக்கிறதே! என்று ஆறுதல் கொள்ள முடியும். அடுத்தவரிடம் இருப்பதைப் பார்த்து, அதை நினைத்துக் கவலைப்படுபவர்களாக ஒருபோதும் இருக்கக்கூடாது.

தன்னை விட கீழ் நிலையில் இருப்பவரைப் பார்த்து தன்னிடம் இருப்பதை வைத்து திருப்தி அடைய வேண்டும்.

அழகில் குறைந்தவர் தன்னை விட அழகில் குறைந்தவரைப் பார்க்க வேண்டும். கண்களை அல்லது கைகளை அல்லது கால்களை இழந்தவர்களைப் பார்க்கும் போது இந்த அழகு என்பதெல்லாம் ஒரு குறையாகவே தெரியாது.

அப்போது இப்படி ஊனமில்லாத உடல் உறுப்புகளை அல்லாஹ் நமக்குத் தந்திருக்கின்றானே! என்று மன நிறைவோடு அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக நாம் மாறுவோம்.

இதுபோல ஊனமுற்றவர்கள் தங்களுக்குக் கீழுள்ளவர்களைப் பார்க்கும் போது மன நிம்மதி அடையலாம். ஒரு கண்ணை இழந்தவர் இரு கண்களை இழந்தவரைப் பார்த்தும், இரு கண்களை இழந்தவர் கை, கால்களை இழந்தவரைப் பார்த்தும், ஒரு கையை இழந்தவர் இரு கைகளை இழந்தவரைப் பார்த்தும் ஆறுதல் பெற முடியும்.

நோயுள்ளவர்கள், தங்களை விட கடுமையான நோய்களால் பாதிக் கப்பட்டோரைப் பார்க்க முடியும். இவர்களை ஒரு நோயாளி பார்க்கும் போது, நமக்கு அல்லாஹ் அளித்திருக்கும் இந்த நோய் அவர்க ளுக்கு வந்திருக்கும் நோயை விட எவ்வளவோ குறைவானது என்பதை உணர்வார். இதை நினைத்து அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி, கவலையை மறந்து, தன் வாழ்வை இனிதே அமைத்துக் கொள்வார்.

ஒருவர் தன்னிடமுள்ளதைக் கொண்டு தன்னிறைவு அடைவ தோடு தனக்குக் கீழுள்ளவர்களைப் பார்த்து ஆறுதல் அடைகின்ற போது உள்ளத்தில் அமைதி குடியேறும், மனம் நிறைவு பெறும். அவர் நல்ல ஆரோக்கியத்துடன், நீண்ட ஆயுள் பெற்று மகிழ்வுடன் வாழ்வார்.

இந்த அற்புதமான, நடைமுறைக்கேற்ற உளவியல் வழிக்காட்டலை நபி (ஸல்) அவர்கள் தந்துள்ளார்கள்:

“செல்வத்திலும் தோற்றத்திலும் தம்மை விட மேலான ஒரு-வரை உங்களில் ஒருவர் கண்டால், உடனே (அவற்றில்) தம்மை விடக் கீழானவர்களை அவர் பார்க்கட்டும்.”

ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி

“உங்களை விட கீழுள்ளவர்களைப் பாருங்கள். உங்களை விட உயர்ந்தவர்களைப் பார்க்காதீர்கள். அல்லாஹ் உங்கள் மீது சொரிந்து உள்ள நி˙மத்தை நீங்கள் குறைத்துப் பார்க்காமல் இருப்பதற்கு இதுவே மிகப் பொருத்தமான வழியாகும்.”

ஆதாரம்: ஸுனன் இப்னி மாஜா

அல்லாஹ் செல்வத்தையும் ஏனைய வளங்களையும் அவனது ஞானத்தின் அடிப்படையில் மனிதர்களுக்கு மத்தியில் வித்தியாசமாக பகிர்ந்தளிக்கின்றான். அந்த வகையில் எனக்கென்று அவன் நிர்ணயித் ததைத்தான் நான் பெற்றுக்கொள்வேன் என்ற உண்மையைப் புரிந்து வாழ வேண்டும்.

இவற்றோடு பின்வரும் நபி மொழிகளையும் மனதிற் கொண்டு போதுமென்ற மனதோடு மனநிறைவோடு வாழப் பழகுவோம்.

"ஒருவருக்கு தன் வாழ்விடத்தில் பாதுகாப்பும் உடலில் ஆரோக்கியமும் அன்றாடம் தேவையான உணவும் இருக்கும் நிலையில் ஒரு காலைப் பொழுதை அவர் சந்தித்தால் அவர் முழு உலகையும் சொந்தமாகப் பெற்றவரைப் போலாவார்."
(திர்மிதி)

"வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று! மாறாக, போதுமென்ற மனமே (உண்மையான) செல்வமாகும்."
(ஸஹீஹ் முஸ்லிம்)

அமர்வு

# 40

சுவன வாழ்வின் ஆரம்பப் பொழுதுகள் எப்படி இருக்கும்!

- சுவனத்தில் நுழையும் போது எங்கு பார்த்தாலும் நதிகள், பழம் தரும் மரங்கள், செடிகள், கொடிகள், தோப்புகள்...

- மாட மாளிகைகள், ஆடம்பரமான கூடாரங்கள்... இன்னும் எத்தனை எத்தனை சுகபோகங்கள்! இவற்றை முதல் தடவையாக காணும் போது....

- நீண்ட காலங்களுக்கு முன் உலகில் நம்மை விட்டுப் பிரிந்தவர்களை சந்திக்கும் போது....

- ஒரு மகன் தன் தாயையும் ஒரு மகள் தனது தந்தையையும் பார்க்கும் போது...

- பெற்றோர் சிறு பிராயத்தில் மரணித்த தமது பிள்ளையை எதிர் கொள்ளும் போது...

- ஒரு கணவன் தன்னை விட்டுப் பிரிந்த தன் மனைவியையும் ஒரு மனைவி தனது கணவனையும் சந்திக்கும் போது....

- ஸஹாபாக்களையும், இமாம்களையும் காணுகின்ற போது....
- நபிமார்களையும், றஸூல்மார்களையும் பார்க்கின்ற போது...
- றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் திருமுகத்தை தரிசிக்கும் போது...
- உலகில் படுக்கையில் இருந்த ஒரு நோயாளி பூரண குணமடைந்து நடமாடும் பேற்றைப் பெறும் போது...
- ஒரு முதியவரின் இளைமை திரும்பும் போது...
- ஒரு மூதாட்டி ஓர் இளம்பெண்ணாக மாறும் போது...
- வல்ல ரஹ்மானின் தரிசனத்தைப் பெறும் போது.....

எப்படி இருக்கும்...! எப்படி இருக்கும்...!

சுவர்க்கத்தின் ஆரம்பப் பொழுதுகள் எப்படி இருக்கும்!

- சுவர்க்கத்தில் முதல் தரிசனம், முதல் இரவு, முதலாவது பகல்... இதுவெல்லாம் எப்படி இருக்கும்...!
- இனி வேலைகள், சோலிகள் இல்லை!
- பொறுப்புகள், கடமைகள் இல்லை!
- வழக்குகள், வம்புகள், விசாரணைகள் இல்லை!
- சண்டை, சச்சரவுகள் இல்லை!
- வெறுப்பு, பகைமை எதுவும் இல்லை!
- பொய், கோள், புறம் முதலான தொல்லைகள் ஏதும் இல்லை!

- போட்டி, பொறாமை இல்லை!

- ஸலாமன், ஸலாமா என்ற வாழ்த்தைத் தவிர வீணான, வெறுப்புக்குரிய வேறு பேச்சுகளோ, செய்திகளோ காதில் விழுவதில்லை!

- முதுமை இல்லை! பலயீனம் இல்லை! மன அழுத்தம் இல்லை! நோய்கள் இல்லை! மருந்துகள், சிகிச்சைகள் தேவையில்லை. மரணமும் இல்லை.

- இத்தகைய சுவர்க்கமல்லவா! நமது ஏக நோக்கமாகவும் ஏக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

"போட்டிப் போடுபவர்கள் அதற்காக (அதாவது சுவன இன்பத்தைப் பெற்றுக்கொள்ள) போட்டி போடட்டும்."

(அல்குர்ஆன்:83-26)

- குறிப்பு: (அறபியிலிருந்து சில மாற்றங்களுடன் பெயர்க்கப்பட்டது)

BookMark
The Online Book Store
www.bookmark.shophere.lk